Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ. ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 15 (01.09.2004) புதன்கிழமை இதழ் :334

## கிழக்கில் தொடரும் படுகொலைகளை நிறுத்த

# படையினருடனான சந்திப்புக்கு விடுதலைப் புலிகள் இணைக்கம்!



(மட்டக்களப்பு)

**கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் கொலைச் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் படைத்தரப்புடன் மீண்டும் சந்தித்துப் பேசுவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலைமைகளை ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுப்பதற்காக நேற்று அங்கு விஜயம் செய்த போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன் புறூவ் ஹெளவ்டே, கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் த.ரமேஷை சந்தித்துப் பேசிய போதே இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுவுடன் புலிகள் அம்பாறையிலும் நேற்றுச் சந்திப்பு!

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையே நேற்றுக் காலை சந்திப்பொன்று நடைபெற்றது.

அம்பாறையின் தம்பிலுவிலுள்ள அரசியற்துறை பணிமனையில் நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தலைமையிலான குழுவினரும்கண்காணிப்பு குழு தரப்பில் மாவட்ட கண்காணிப்புத் தலைவர் ரகீம் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் இடம் பெற்றுவரும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த உடன்பாடு குறித்து

## லண்டனில் பாலசிங்கத்துடன்

## மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

### மானிப்பாயில் சம்பவம்

(மானிப்பாய்

மானிப்பாய் பகுதியில் கடை ஒன்று பற்றி எரிந்து கொண்டிருந்தபோது தனை அணைக்க முற்றபட்ட குடும்தர் ஒருவர் மின்சாரம் தாக்கி பரிதாபமாக மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மானிப்பாய் - இணுவில் வீதியில் இடம் பெற்றது.

அரசடி வீதி, கட்டுடை - மானிப்பாயை ந்த 57 வயதான வைரமுத்து செல்வம் பரே இந்தச் சம்பவத்தில் மரண டைந்தவரவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தரியவருவதாவது -

இரவு 11.00 மணியளவில் கடை ப்பற்றி எரிவதை பார்த்த மேற்படி நபர்

## உறக்கத்திலிருந்த மனைவியை கடித்துக்குதறிய கணவன்!

### நாவற்குழி பகுதியில் சம்பவம்

உறக்கத்திலிருந்த தனது மனைவியை அதிகாலை வேளை கணவன் கடித்துக் குதறிய சம்பவம் ஒன்று நேற்று நாவற்குழியில் இடம்பெற்றது.

இந்திய இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக் காலத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தலையில் பலத்த காயமடைந்திருந்த பிரஸ்தாப குடும்பஸ்தர், இடையிடையே மனநிலை பாதிக்கப்பட்டு, குணமடைந்திருந்தார்.

இவருக்கு நாவற்குழியைச் சேர்ந்த பெண் ஒருவரை ஆறு மாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்துவைக்கப்பட்டது.

திருமணமான சில தினங்களில் மீண்டும் மனநிலை பாதிக்கப்பட்ட இவர், தெல்லிப்பளை வைத்தியசாலை மனநோய் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று, ஐந்து தினங்களுக்கு முன்னர் குணமடைந்து வீடு திரும்பியிருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீடுகளை ஒப்படைக்கக் கோரி உசன் பகுதி மக்கள் மறியல்!

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் உள்ள தமது வீடுகள் ஒப்படைக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்து யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் உசன் மக்கள் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

...ற்றது.

அரசடி வீதி, கட்டுடை - மானிப்பாயை ...ந்த 57 வயதான வைரமுத்து செல்வம் ...பரே இந்தச் சம்பவத்தில் மரண ...டைந்தவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் ...தரியவருவதாவது -

இரவு 11.00 மணியளவில் கடை ...ப்பற்றி எரிவதை பார்த்த மேற்படி நபர் ...யை அணைக்க முற்பட்ட போது கடை ...யின் முன்பக்க கம்பி வலையின் மீது மின் ...ஒழுக்கு ஏற்பட்டதன் காரணமாக மின்சாரம் ...தாக்கி மரணமடைந்ததாக தெரிவிக்கப் ...டுகிறது.

மரணமடைந்தவரின் சடலம் யாழ் ...பாதனா வைத்தியசாலைக்கு எடுத்து ...ரப்பட்டு பிரேதபரிசோதனைகளின் பின்னர் ...றவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் இடத்துக்கு சென்ற பொலிஸார் அது தொடர்பாக விசாரணைகளை மேற் ...காண்டு வருகின்றனர்.

## போர்நிறுத்த உடன்பாடு குறித்து

# லண்டனில் பாலசிங்கத்துடன் எரிக் சொல்ஹெய்ம் பேச்சு!



போர்நிறுத்த உடன்பாட்டை சீராக அமுல்ப் படுத்துவது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இரண்டு மணிநேரப் பேச்சுக்களை நடத்தினார்.



லண்டனில் உள்ள கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ்_பிரட்ஸ்கரும் பங்கு கொண்டார். (12 ஆம் பக்கம பார்க்க)

## உசன் பகுதி மக்கள் மறியல்!

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் உள்ள தமது வீடுகள் ஒப்படைக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்து யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் உசன் மக்கள் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

உசன் மக்கள் சார்பாக நேற்று இந்த மகஜரை அப்பகுதி மக்கள் பிரதிநிதிகள் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ருவான் சந்திரசேகரவிடம் கையளித்தனர்.

அந்த மகஜரில் உசன் பகுதியில் வசித்துவந்த ஆயிரக் கணக்கான மக்கள் வீடுகளை இழந்த நிலையில் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றோம் என்றும்,

எமது வீடுகளை இராணுவத்தினர் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் ஆக்கிரமித்து நிற்கின்றனர். இதனை நாம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ...ிழக்குப் பகுதி நிலைமைகள் தொடர்பாக ...காணிப்புக்குழுவுக்கு விளக்கினோம்!

## ...டடு - அம்பாறை அரசியற் பொறுப்பாளர் கௌசல்யன்!

(மட்டக்களப்பு)

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் ...லைவருடனான சந்திப்பில் மட்டக்களப்பு ...வட்டத்தில் அண்மைக்கால நிகழ்வுகள் ...தாடர்பாகப் பேசப்பட்டதுடன், போராளிகள் ...ராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ...சன்று அரசியல் பணிபுரிவதில் உள்ள ...ச்சுறுத்தல்கள் தொடர்பாக அவருக்கு விளங்கப்படுத்தியிக்கின்றோம் என்று மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.கௌசல்யன் தெரிவித்தார்.

நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும இடையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பட்டதாரிகளுக்கான நியமனம்; நிகழ்வை எதிர்த்து போராட்டம்!

## பெயர் வெளிவராதோர் நடத்த முஸ்தீபு

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நாளை வேலையற்றபட்டதாரிகளில், முதல் தொகுதியினருக்கு அரச அலுவலகங்களில் பணியாற்றுவதற்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்படுவதை எதிர்த்து போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தை அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட முதல் தொகுதி பட்டியலில் பெயர் விபரங்கள் இடம்பெறாத வேலையற்ற பட்டதாரிகளே நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மூப்பின் அடிப்படையில் பட்டம் பெற்ற திகதியைக் கொண்டே அரசாங்கம் வேலையற்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ ஏயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAiR
Your friend in the skies...

# சிறுதொழில் அதிபர்களே! சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களே!







நீங்கள் தினமும் இரத்த வேர்வை சிந்தி உழைத்தது போதும். உங்களுக்கு கைகொடுக்க நவின், கெனடி, பிராண்ட் அரைக்கும் இயந்திரம், தோசை, வடை, சட்டினி, தேங்காய் துருவ ஆட்டாமா குழைக்க மிளகாய்கூட்டு, அதைவிட கீரை வகை கடைய, ஈரமாக அரைக்கும் இயந்திரம் உங்கள் தேவை எதுவானாலும் எங்களை அணுகுங்கள். உங்கள் வருமானத்தை மூன்று மடங்கு ஆக்க எங்கள் ஸ்தாபனத்தால் நவின், கெனடி, பிறாண்ட் (சின்னம்), டீசல் என்ஜின், மின்சார மோட்டார் வகைகள் மா அரைக்கும் இயந்திரம், நெல் குற்றும் இயந்திரம், தோல் நீக்கும் இயந்திரம், மரம் சீவும் வெட்டும் இயந்திரம் என்பனவும் ஒரு நாளில் 20 டன்னிலிருந்து 40 டன் வரை நெல் குற்றும் இயந்திரங்களும் இவ் இயந்திரங்களின் உதிரிப்பாகங்களான பெல்ட், பெல்ட்பசை, றெக்ஸ் பிடூளற் இவை எதுவானாலும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம் கெனடி, நவின், றெக்ஸ் பிறாண்ட் இயந்திரங்களுக்கு இலங்கையின் இறக்குமதியாளரும் ஏக விநியோகஸ்தர்களும் நாங்களே!

# சமுத்திரா றேடீஸ் லிமிட்டட்

117, ஸ்ரான்லி வீதி , யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 222 2938

தொடர்புகளுக்கு :
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
212 கே.கே.எஸ் வீதி, யாழ்.
தொ.இல - 021 222 5542

குறிப்பு: 60% வரையான வங்கிக்கடன் வசதிகள் செய்து தரப்படும்



10 ஆவது ஆண்டில்

முல்லை நகரில்...

01.09.2004 முதல்

உங்கள்
நம்பிக்கையின்
சின்னம்

தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM

# தமிழீழ வைப்பகம்

**வைப்பு வசதிகள்**
- தேட்ட வைப்புக்கள்
- நிலையான வைப்புக்கள்

**கடன் வசதிகள்**
- தங்க அடைவுக் கடன் சேவை
- ஏனைய கடன் வசதிகள்

**மேலும் பல வைப்பகப் பணிகள்**

வாருங்கள் உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றோம்

**தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்**

(C/2816)

# அரசாங்கம் அறிவிக்கும்வரை கண்காணிப்புப் பணி தொடரும்

## பிரதித் தலைவர் ஹொக்லண்ட் தெரிவிப்பு

இலங்கையின் சமாதான முயற்சிகளில், கண்காணிப்புப் பணிகள் தேவையில்லையென அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரை - கண்காணிப்பு சேவையிலிருந்து தாம் விலகிக் கொள்ளப் போவதில்லை என கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் பக்கம் சார்பாகச் செயற்பட்டுவருவதாக, அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்க மற்றும் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர உள்ளிட்ட அரச தரப்பினரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பாகவே கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகள் குறித்து, தாம் கவலையடையப் போவதில்லை எனவும் - ஒரு சில அரசியல் வாதிகள் தெரிவிக்கும் கருத்துக்கள் அரசாங்கத்தின் கருத்தாக அமைய முடியாதென்பதை நன்கறிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விலை உயர்வை கட்டுப்படுத்துமாறு ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை!

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பித்து, தற்போது அதிகாரித்துள்ள விலை உயர்வைக் கட்டுப்படுத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை கோரியுள்ளது.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகளுடனான, தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியடையுமாக இருந்தால், தற்போது அதிகரித்துள்ள பொருட்களின் விலையின் உயர்வு எதிர்காலத்தில் இரண்டு மடங்காக அதிகரிக்கும்.

அத்துடன், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கப்படுவதை ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஒன்பது சதவீதத்தால் பஸ் கட்டணம் அதிகரிப்பு

## போக்குவரத்து அமைச்சு அறிவிப்பு

பஸ் கட்டணம் ஒன்பது சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகப் போக்குவரத்துத் துறையமைச்சர் வசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையை நஷ்டத்திலிருந்து மீட்பதற்கும், பெற்றோலியப் பொருள் விலை உயர்வைச் சமாளிக்கவுமே இந்த விலை அதிகரிப்பைப் போக்குவரத்துச் சபை மேற்கொண்டுள்ளது.

எனினும், இது நிரந்தரக் கட்டண உயர்வல்ல எனவும் விரைவில் இது மாற்றி அமைக்கப்பட்டு குறைக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கட்டண அதிகரிப்பு நாளைமுதல் நடைமுறைக்கு வருமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவ பாதுகாப்பு அதிகரிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவப் பாதுகாப்பு ஏற்பாடுகள் கடந்த சில தினங்களாக அதிகரிக்கப்பட்டு வருகின்றது. நகரின் முக்கிய பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

திருகோணமலை - கண்டி வீதியில் அமைந்துள்ள குரங்குப் பாலம் இராணுவ முகாமைச்சுற்றியுள்ள காட்டுப் பிரதேசங்களில் கனரக வாகனம் கொண்டு சுத்தப் படுத்தப்படுகின்ற தோடு, காவலரண் களும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன், சுமார் 10 அடி உயரத்துக்கு மண் அரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றது. (10)

# ஜனாதிபதி - புறூவ்ஹொவ்டே அடுத்தவாரம் சந்திக்கவுள்ளனர்

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து, கலந்துரையாடித் தீர்க்கமான முடிவு ஒன்றை எடுப்பதற்காக ஜனாதிபதிக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் புறூவ்ஹொவ்டேக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று இந்தவாரம் நடைபெறவுள்ளது.



தற்போதுள்ள கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை போதாமையால் மேலும் 25 பேரை இணைத்துக் கொள்வதற்குக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் செய்த விண்ணப்பத்தைப் பரிசீலித்துப் பார்த்தே அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.



தற்போது வடக்கு மற்றும் கிழக்கிலும், கொழும்பு தலைமையகத்திலும் இருக்கின்ற கண்காணிப்பாளர்களின் தொகை 55 என்றும் கண் காணிப்புக்குழுத் தலைவர் அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனால், வடக்கு - கிழக்குப் பிரதேசத்துக்கும், கொழும்புக்கும் அதிக கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்பு, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் நோர்வேக்குச் செல்லவுள்ளார்.

புதிதாகக் கண்காணிப்பாளர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை நோர்வேயில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதன் பின்னர் புதிய கண்காணிப்பாளர்களைக் கடமையில் ஈடுபடுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# புதிய அரசாங்கம் விரைவில் பெரும்பான்மையை நிரூபிக்கும்

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் - விரைவில் தனது பெரும்பான்மையை நிரூபிக்கும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தனது அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தனது பெரும்பான்மையை நிரூபிக்கும் தருணம் கனிந்துவிட்டது. இன்னும் சிறிது காலத்தினுள் இந்தப் பெரும்பான்மை நிரூபிக்கப்படும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவு குறித்து, ஓரிரு தினங்களில் தெரியவந்தாலும் கூட அதைவிட அரசுக்கு ஆதரவு வழங்க எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராகவுள்ளார்கள்.

இதனை நாம் நிரூபிக்கவே போகிறோம். எனினும், எமக்கு எதிர்க் கட்சிகளின் ஆதரவும் அவசியம். ஏனெனில், தற்போது முன்னெடுக்கப்படும் சமாதானம் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கும் அனைவரினதும் ஒத்துழைப்புக்கள் அவசியம்.

நாட்டைக் கட்டி எழுப்புவதற்குப் பெரும்பான்மை மட்டுமல்லாது, எதிரணியின் ஆதரவும் முக்கியமாகவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# அவசரகால சட்டத்தைப் பிறப்பிக்க ஜாதிக ஹெல உறுமய கோருகிறது

நாட்டில் மிகவும் குழப்பமான ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால், உடனடியாக அவசர காலச் சட்டத்தை மீளவும் பிறப்பித்து நிலைமையைச் சீராக்க முயற்சிக்குமாறு ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடியும், வன்முறைகளும் நாட்டில் மிகவும் மோசமாக உயர்ந்துள்ளதால், தொடர்ந்தும் பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றும் ஆளும் அரசு, அதைக் கைவிட்டு, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

பொருளாதாரம் சீர்செய்யப்பட்டு, நாட்டின் இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகள் அதிக விட்டுக் கொடுப்பற்ற தீர்விற்கான முயற்சியெடுக்கும் என்ற நம்பிக்கையில் மட்டுமே சிங்கள மக்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்தார்கள். அதை இந்த அரசு ஏமாற்றிவிட்டது எனத் தெரிவித்தார்.

இதற்கிடையில், மல்வத்தை பீடாதிபதியான அதிவண. திபொத்துவேவ சித்தார்த்த ஸ்ரீ சுமங்கல தேரோவுக்கு, ஹெல உறுமயவின் பிரதித் தலைவர் வண.ஓமல்பே சோபித தேரோ எழுதியுள்ள கடிதத்தில் - விடுதலைப் புலிகளுடன் சந்திப்பை நடத்துவதான முடிவை மீள்பரிசீலனை செய்யும்படி கோரிக்கை விடுத்துள்ளார்.

# குண்டுவெடிக்கும் யுகத்தைக்காண நாட்டுமக்கள் தயாராக இல்லை!

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

நாட்டு மக்கள் குண்டு வெடிக்கும் யுகம் ஒன்றை மீண்டும் காண்பதற்குத் தயாரில்லை என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.



குருநாகல் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

முன்னர் போன்று வீதிச் சோதனைச் சாவடிகள் அமைத்து, மக்களை கஷ்ட நிலைக்கு இட்டுச் செல்வதற்கு அரசாங்கம் விரும்பவில்லை.

நாட்டில் 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட சட்ட விரோத ஆயுதங்கள் பல்வேறு தரப்பினர் வசம் உள்ளது. அவ்வாறு ஆயுதங்களை வைத்திருப்போர் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்க முடியாது. இவ்வாறான ஆயுதங்களை மீளவும் பெற்றுக்கொள்வதற்கு திட்டமொன்றை வெகுவிரைவில் அரசு நடைமுறைப் படுத்தவுள்ளது. என்றும் அவர் தெரிவித்தார்.

# வெளிநாடுகளின் தாளத்துக்கு ஆடும் நாடாகவே இலங்கை விளங்குகிறது

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



பணத்துக்காக நாட்டைக் காட்டிக்கொடுப்பதா, அல்லது தேசிய பொருளாதாரத்தை வளர்ப்பதா என்பதை பொதுமக்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டுமென. வியாங்கொட வில் இடம்பெற்ற தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் மாநாட்டில் கலந்துகொண்டு பேசும்போது விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்தார்.

இலங்கையைத் துண்டாடும் இடைக்கால நிர்வாக சபை யோசனையை ஏற்றுக்கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சி, சர்வதேசம், தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பலர் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

சுமார் 25 வருடங்களாக வெளிநாடுகளின் தாளத்துக்கு ஆடுகின்ற ஒரு நாடாகவே இலங்கை விளங்கிறது.

இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றால், அரசாங்கத்தில் இருந்து ஜே.வி.பி. விலகிச்செல்லும் என்பதை நன்கு அறிந்துகொண்டே, இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தயாரா? என அறிவிக்குமாறு அரசாங்கத்திடம் ஐக்கிய தேசியக் கட்சி சவால் விட்டு வருகிறது.

அத்துடன், கூட்டமைப்பிலிருந்து ஜே.வி.பி.யை விலகவைத்து அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு முயற்சியாகவே ஐக்கிய தேசியக் கட்சி இத்தகைய சவால்களை விடுத்து வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

# தீவிரமான விடயங்கள் குறித்து புலிகளுடன் வாதாடப் போவதில்லை

## மல்வத்த பீடாதிபதி தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சந்திப்பின்போது, தான் எந்தவித தீவிரமான விடயங்கள் குறித்தும் வாதாடப் போவதில்லை என, கண்டி மல்வத்த பீடாதிபதி சிறிசுமங்கள தேரர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் இடம்பெறவுள்ள சந்திப்புக்களின்போது, கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நான் ஒரு பொதுவுடமைவாதியோ அல்லது மதவாதியோ அல்ல, எனது கொள்கைகள் யாவும் பௌத்த தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதே.

அத்துடன், விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை என்ன அடிப்படையில் மேற்கொள்வதென்பது தொடர்பாக பௌத்த சங்க சபையுடன் கலந்துரையாடவுள்ளேன்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான விடயங்கள் ஆராயப்படும்போது தீவிரவாதப் போக்குகளை உதறித்தள்ள வேண்டியது அவசியம்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஜே.வி.பி.யும் தமிழீழ விடுதலைப் புலிகளும் விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டியது அவசியம்

பல்வேறு நாடுகளின் ஆயுதக் குழுக்கள் பல அரசியல் நீரோட்டத்தில் இணைந்து தேர்தல்களை சந்தித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு விட்டு அரசியலுக்கு வர வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுததார்.

## பல்கலைக்கழக மாணவர்களுககான

# உதவிப்பணக் கொடுப்பனவை அதிகரிக்குமாறு கோரிக்கை

யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவிப்பணக் கொடுப்பனவை அதகரிக்குமாறு பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவைக் கேட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவைப் பெறும் மாணவர்களுக்கு இதை அதகரிப்பதற்கு வர்த்தக வணிக நுகர்வோர் அமைச்சு தீர்மானித்துள்ளது.

எனவே, இவ்வாறான அதிகரிப்பை மாணவர் உதவிப் பணம்பெறும் மாணவர்களுக்கும் அதிகரிக்குமாறு கோரியே இவ்வாறு நிர்வாகத்தால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (சீ)

தென்னாபிரிக்காவுடனான

# ஐந்தாவது ஒருநாள் போட்டியிலும் இலங்கை அணி வெற்றிபெற்றது!



இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியுமான சர்வதேச ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 49 ஓட்டங்களால் வெற்றி பெற்றதன் மூலம் தொடரின் ஐந்து போட்டி களையும் வென்றுள்ளது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற




தென்னாபிரிக்க அணித் தலைவர், களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதனைய டுத்து இலங்கை அணி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

இலங்கை அணி சார்பில் அவிஷ்க குண வர்த்தன மற்றும் சனத் ஜெயசூர்ய இருவரும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். இதில் அவிஷ்க குணவர்த்தன, பொலக்கின் முதலா வது ஓவரிலேயே 3 பந்துகளைச் சந்தித்து ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் சனத்துடன் இணைந்தவர் ஜெயந்த. இவர்கள் இருவரும் இரண்டாவது விக்கெட்டுக்காக 125 ஓட்டங்களைப் பெற்ற னர். இதன் பின்னர் ஜெயந்த 51 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் குளூஸ்னரின் பந்துவீச்சில் ஸ்மித் திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் விக்கெட் கீப்பர் சங்ககார, சனத்து டன் இணைந்தார். இருவரும் சிறப்பாக விளை யாடிக் கொண்டிருக்கையில் சனத் 79 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் சங்க கார 72, ஜெயவர்த்தன 39, டில்ஷான் 18,



உபுல்சந்தன 12, லொக்கு ஆராய்ச்சி 12, ம.்.ரூப் மற்றும் சொய்சா இருவரும் ஆட்ட மிழக்காமல் முறையே 4, 5 ஓட்டங்களைப் பெற்றனர்.

இறுதியில் இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 308 ஓட்டங்களைக் குவித்தது. இதில் தென்னா பிரிக்க அணி 27 ஓட்டங்களை உதிரியாக விட்டுக் கொடுத்தது.

பந்துவீச்சில் பொலக் 2, ஜான்ஜிவெல்ற் 3, ஸ்மித் மற்றும் குளூஸ்னர் இருவரும் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 309 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற மிகப்பெரிய இலக்குடன் ஆடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணிக்கு, ஆரம் பமே நன்றாக அமையவில்லை. இதில் ஆரம்ப வீரர் கிப்ஸ், 6 ஓட்டங்களைப் பெற்றிருக்கை யில் சொய்சாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந் தார்.

இதன்பின் அணித் தலைவர் ஸ்மித் 13 ஆவது ஓவரில் 25 ஓட்டங்கள் பெற்றிருக்கை யில் 'ரன் அவுட்' ஆனார். கலிஸ் மற்றும் றுடோல்ப் இருவரும் மூன்றாவது விக்கெட்டுக் காக 114 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் றுடோல்ப் 48 ஓட்டங்களைப் பெற்றிருக்கை



யில் உபுல் சந்தனவின் பந்துவீச்சில் டில்சானி டம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் தென்னாபிரிக்க அணியில் கலிசைத் தவிர மற்றைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தனர்.

கலிஸ் 123 பந்துகளில் 101, பௌச்சர் 24, பொலக் 11, போஜி 21 ஓட்டங்களைப் பெற் றனர். இறுதியில் தென்னாபிரிக்க அணி 48.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 259 ஓட்டங்களை மட்டுமே பெற்ற தால், 49 ஓட்டங்களால் தோல்வியைத் தழு வியது.

பந்துவீச்சில் உபுல் சந்தன 5, சனத் 3, சொய்சா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்றைய போட்டியில் இலங்கை அணித் தலைவர் அத்தபத்து, சமிந்தவாஸ் இருவரும் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




## தாச்சிப் போட்டிக்கு ஏற்பாடு

தியாக தீபம் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியை யாழ். மாவட்ட தாச்சிச் சங் கம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அனுசரணையுடன் நடாத்தவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து தாச்சிக் கழகங்களும் பங்குபற்றும் இந்த தாச்சிச் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங் களை நாளை மறுதினத்துக்குள் - சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பும் படி கேட்கப்பட்டுள்ளது. (91)

## உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட இறுதியாட்ட நிகழ்வுகள்!

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி லக்கிஸ்டார் விளையாட்டுக் கழகம் நடாத்திய - உதைபந்தாட்ட, வலைப் பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வட்டக்கச்சி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

வலைப்பந்தாட்டப் போட்டியில் - வட்டக்கச்சி மகா வித்தியாலய பெண்கள் அணியுடன் குருகுலம் பெண்கள் அணி மோதியது. இதில் குருகுல அணியை வட்டக்கச்சி மகாவித்தியா லய அணி 19:11 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தைச் சுவீ கரித்துக்கொண்டது.

அடுத்து உதைபந்தாட்டப் போட்டியில் - உழவர் ஒன்றிய அணி சந்திரோதயா அணி யைப் பனால்டி மூலம் 4:2 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றது.

சிறந்த கோல் காப்பாளராக சந்திரோதயா அணியைச் சேர்ந்த டிலோஸ் திலீப்பும், சிறந்த வீரராக உழவர் ஒன்றிய அணியைச் சேர்ந்த சுரேஸும், வலைப்பந்தாட்டப் போட்டியில் சிறந்த வீராங்கனையாக வே.றமாவும் தெரிவாகி னர். (09)

## அவுஸ்ரேலிய முன்னாள் வீரர் இந்திய அணிக்குப் பயிற்சி

இந்திய கிரிக்கெட் அணி வேகப்பந்து வீச்சாளர்களுக்கு, அவுஸ்ரேலிய முன்னாள் வீரர் புரூஸ் ரீட் மீண்டும் பயிற்சியளித்து வருகிறார்.

நட்வெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி பந்துவீச்சாளர்களுக்கு, அவுஸ்ரேலிய முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் புரூஸ் ரீட் பயிற்சி அளித்து வருகிறார்.

அவர் கடந்த 2 நாட்களாக பயிற்சியின் போது ஆலோசனை வழங்கினார். பின்னர் ஐ.சி.சி. போட்டியின் போதும் அவர் இந்திய பந்துவீச்சாளர்களுக்கு ஆலோசனை அளிக்க வுள்ளார்.

கடந்த அவுஸ்ரேலிய சுற்றுப் பயணத்தின்போது இந்திய பந்து வீச்சாளர்களுக்கு புரூஸ் ரீட் பயிற்சியளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வத்திராயன் உதயசூரியன் கழகம் நடத்தும்

## உதைபந்தாட்டப் போட்டியின் முதலிருநாள் முடிவுகள்!

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஒன்பது பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதல் நாள், இரண்டாம் நாள் போட்டிகள் - உதய சூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த மாதம் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் நடைபெற்றது. முதல்நாள் போட்டியில் -


அருணோதயா எதிர் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டியில் - சென். பீற்றர்ஸ் அணி கலந்து கொள்ளாமையால் அருணோதயா அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இரண்டாம் நாள் போட்டியில் பாரதி எதிர் சென். பிலிப்நேரிஸ் அணிகளுக்கிடையில் போட்டி இடம்பெற்றது. இந்த இரு அணிகளும் சமநிலையில் இருந்தமையால் பனால்டி வழங் கப்பட்டது.

இதில் பாரதி விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

இன்னொரு போட்டியில் - சென். பிலிப் நேரீஸ் எதிர் சக்திவேல் அணிகள் கலந்து கொண்டன. சென். பிலிஸ் நேரீஸ் அணி 3:0 என்ற கோல்க் கணக்கில் வெற்றிபெற்றது. (21)

## நட்வெஸ்ட் ஒருநாள் தொடர் இன்று இங்கிலாந்தில் ஆரம்பம்!



(டிரென்ட்பிரிஜ்)

இங்கிலாந் துக்கு எதிரான நட்வெஸ்ட் தொடரில் முதல் ஒருநாள் போட்டி யில் - இந்திய அணி இன்று மோதவுள்ளது. 2 ஆவது போட்டி எதிர்வரும் 3 ஆம் திகதியும், கடைசி மற்றும் 3 ஆவது போட்டி 5 ஆம் திகதி லோர்ட்ஸ் மைதானத்தி லும் நடைபெறவுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி சமீபகாலமாக மோசமாக ஆடி வருகிறது. ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் - இந்தியா இலங்கை யிடம் மோசமாகத் தோற்றது.

அடுத்து ஹொலண்ட்டில் நடைபெற்ற 3 நாடுகள் போட்டியில் - முதல் ஆட்டத்திலே பாகிஸ்தானிடம் தோல்வியடைந்து இறுதி ஆட்டத்தில் நுழைய முடியாமல் வெளியேறி யது.

இந்திய அணியின் நட்சத்திர ஆட்டக் காரரான டெண்டுல்கர் காயம் காரணமாக இந்தத் தொடரில் ஆடவில்லை.


அத்துடன், அவர் இந்திய பந்து வீச்சாளர் களுக்கு பயிற்சி அளித்துவரும் அவுஸ்ரேலிய வீரர் புரூஸ் ரீட்டுடன் இணைந்து பந்து வீச் சாளர்களுக்கு பயிற்சியளிப்பார் என அறிவிக் கப்பட்டுள்ளது.

டெண்டுல்கருக்குப் பதிலாக இன்றைய ஆட்டத்தில் விளையாட, இளம் விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக் அல்லது ரோகன் கவாஸ்கருக்கு வாய்ப்பு அளிக்கப்படலாம்.

வேகப்பந்து வீச்சாளர்களில் - இர்பான் பதான், நெஹ்ரா, பாலாஜி ஆகியோர் களம் இறங்குவார்கள். சுழற்பந்து வீச்சாளர்களில் கும்ளே, ஹர்பஜன்சிங் ஆகிய இருவர்களில் ஒருவருக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணி தற்போது வலுவான நிலையில் உள் ளது. அந்த அணி, மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக சமீபத்தில் நடைபெற்ற போட்டிகளில் சிறப்பாக ஆடி வெற்றிபெற்றது.

இங்கிலாந்து அணியில் துடுப்பாட்டத்தில்- வோகன், டிரெஸ்ட் கோதிக், பிளின்ரொப், கோலிங்வூட் ஆகியோர் சிறந்து விளங்குகின்றனர். பந்துவீச்சில் கோவ், அன்டர்சன், ஜைல்ஸ் நல்ல நிலையில் உள்ளனர்.



இதுவரை இந்திய அணி, இங்கிலாந்துடன் 48 முறை மோதியுள்ளது. இன்று 49 ஆவது முறை மோதுகின்றது. இதில் இரு அணிகளும் தலா 23 முறை வெற்றிபெற்றுள்ளன. இரண்டு ஆட்டங்கள் முடிவில்லாமல் போனது.

இந்திய அணியில் இடம்பெறும் வீரர்கள்- கங்கூலி (கப்டன்), ஷேவாக், ராகுல் ராவிட், லக்ஷ்மன், யுவராஜ்சிங், கயூப், அகர்கர், கும்ளே, ஹர்பஜன்சிங், இர்பான் பதான், ஆசிஷ் நெஹரா, ரோகன் கவாஸ்கர், தினேஷ் கார்த்திக்.

இங்கிலாந்து அணியில் இடம்பெறும் வீரர் கள்-

வோகன் (கப்டன்), டிரெஸ்கோதிக், கோலிங வூட், அன்ட்ரூஸ்ட்ராஸ், பிளின்ரொப், ஜேம்ஸ் அன்டர்சன், கபிர் அலி, பெட்டி, கோவ், ஸ்ரீ பன், ஹர்மிசன், ஜோன்ஸ், விக்ரம் சோலங்கி, ஜைல்ஸ் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில்

## பிறேசில் நாட்டு வீரரை தாக்கியவர் கைதானார்!

(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக்கின் இறுதிப் போட்டி யான 42 கிலோமீற்றர் தூரம் மரதன் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தை வெல்லும் நம்பிக்கையில் ஓடிக்கொண்டிருந்த பிறேசில் வீரரை ரசிகர் ஒருவர் தள்ளி வீழ்த்தியதால்- அவரால் வெண்கலப் பதக்கத்தையே வெல்ல முடிந்தது.

பிறேசில் வீரருக்கு நிகழ்ந்த இந்த துர திஷ்ட சம்பவம் குறித்து மேலும் தெரியவரு வதாவது -

இறுதிப் போட்டியான 42 கிலோ மீற்றர் மரதன் ஓட்டத்தில் பிறேசில் வீரர் டெர்லி சிறிலிமா முன்னணியில் ஓடிக்கொண்டிருந்தார். ஓட்ட இலக்குக்கு 5 கிலோ மீற்றர் தொலை வில் சென்று கொண்டிருந்தபோது, பார்வை யாளர் வரிசையிலிருந்து ஒருவர் திடீரென ஓட்டப் பாதையில் நுழைந்து, வான் டெர்லி சிறிலிமாவைத் தாக்கித் தள்ளி வீழ்த்தினார்.

இந்தக் களேபரத்தில் சற்று நேரம் தாம தித்தே ஓடிய சிறிலிமாவால் வெண்கலப் பதக்கத்தையே பெறமுடிந்தது.


தான் தாக்கப்பட்டதால்தான் தங்கப் பதக் கத்தை இழக்க நேரிட்டதாக இவர் ஒலிம்பிக் கமிட்டியில் முறைப்பாடு செய்துள்ளார்.


லிமாவைத் தாக்கியவரைப் பொலிஸார்






கைது செய்தனர். அவர் பெயர் ஹரோன். முன்னாள் பாதிரியாரான அவர், குடிபோதை யில் இந்தச் செயலில் ஈடுபட்டதாகத் தெரி வித்துள்ளார். சிறப்பாக நடந்த இந்த ஒலிம்பிக் போட்டியில் இது ஒரு மோசமான நிகழ்வாகக் கருதப்படுகிறது.


# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை -2004


1. ஒரு தோடம்பழம் X ரூபா. 5 மாம்பழம் Y ரூபா ஆயின், ஒரு தோடம்பழமும் ஒரு மாம்பழத்தினதும் விலையைக் காண்க.
2. n(A) = 10 n(B)= 8 n(A B)= y ஆயின் n(AuB) =?
3. $\frac{XY - XZ}{Y^2 - Z^2}$ பெறுமானம் யாது?
4. 5000 ரூபாவின் 12 1/2% எவ்வளவு?
5. L=a+(n-1)d இல் a=5 n=12, d=3 ஆயின் L இன் பெறுமானம் யாது?
6. 2Y = 7x+3 என்ற நேர்கோட்டுச் சமன்பாட்டின் படித்திறன், வெட்டுத் துண்டு ஆகியவற்றை காண்க.
7. 

இதன் வளை பரப்பளவு யாது?
8. $3\frac{1}{2} \div 1\frac{2}{3}$ இன் $\frac{1}{5}$ சுருக்குக
9. 5(x-2) - 3 (6-3x) = 1 தீர்க்க
10. 10.5 Kg சீனியில் இருந்து 50g சரைகள் கொண்ட எத்தனை பொதிகள் கட்டலாம்?
11. ஒழுங்கான பல்கோணியின் ஒரு அகக்கோணத்தின் பெறுமதி $156^0$ அதன் பக்க எண்ணிக்கை எவ்வளவு?
12. V=u+at இதில் a ஐ எழுவாய் ஆக்குக.
13. 3x(2x-1) = 0 மூலகங்களைக் காண்க.
14. 20,18, 16 என்ற தொடரில் 18 ஆம் உறுப்பு யாது?
15. $\sqrt{30x36x9}$ காரணி மூலம் பெறுமானம் சாண்க?
16. 12% பங்குலாபம் கொடுக்கும் 12/= பங்குகளை 10/= படி வாங்கு வதற்கு ரூபா 5600 முதலிட்டால் கிடைக்கும் வருமானம் யாது?
17. 450/= இற்கு வாங்கப்பட்ட பொருள் 600/= விற்கு விற்பனை செய் யப்பட்டால், இலாப சதவீதம் யாது?
18. $Log\ 3^{243}$ இன் பெறுமானம் யாது?
19. ஒரு வட்டத்தின் பரிதி 88 cm ஆயின் அதன் பரப்பு யாது?
20. 

பரப்பளவு யாது?
21. 

X,Y,Z ஐ காண்க
22. 

C இன் பெறுமானம் யாது
23. 

முக்கோணி ADC இன் சுற்றளவு யாது?
24. X=2 Y=-3 ஆயின் $X^2$ -XY இன்
25. AB இன் நீளம் யாது? பெறுமானம் யாது?


26. ஆண்டுப் பெறுமானம் ரூபா 18000/= ஆக உள்ள வீடு ஒன்றுக்கு 6% ஆணடு வரி அறவிடப்பட்டால் காலாண்டு வரி யாது?
27. X-Y=7, 2X+Y=2 ஆயின் X ஐக் காண்க
28. $9C^2 - 4$ காரணி ஆக்குக.
29. $\sqrt{12}$ x $\sqrt{4}$ சேடுகளில் தருக
30. $Log10^8 + Log10^{25} - Log\ 10^2$

B.சிவா

## தமிழ் மொழியும் இலக்கியமும்

1. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்க ளுக்கு விடை எழுதுக.

அ. 'அலைபு இலா அரிச்சந்திரற்கு அல்லது தொலைவில்
யாவற்கும் தோற்றரு மங்கலம் புலையன் காணவும் போதுவதோ...'

i. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
ii. யாருக்கு கூறப்பட்டது?
iii. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
iv. இத் தொடரால் காட்டப்படுகின்ற சிறப்பு என்ன?

ஆ. "மின்னையும் உனையும் விற்ற வெவ்வினை
எனை எவ்வணம் நொந்தனை ஏந்தலே..."

i. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
ii. யாருக்கு கூறப்பட்டது?
iii. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
iv. 'மின்னை என்று கூறப்பட்டிருப்பவர் யார்?

இ. "வடிஏறு வெற்றி நெடுவேல் மலர்க்கை மகனோடு இறந்து
மடியாக் கொடியேன் முகத்தில் விழியார்...."

i. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
ii. யாருக்கு கூறப்பட்டது?
iii. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
iv. இத் தொடரில் சிறப்பிக்கப்படுபவர் யார்?

2. பின்வரும் செய்யுள்களின் பொருளை உமது உரைநடையில் எழுதி அவற்றில் காணப்படும் பாத்திரத்தின் துன்பநிலையை விபரிக்குக.

அ. "கையினில் உலக்கை பற்றிக் காந்தனின் உதிரம் பாய
மெய்யினில் வியர்வை சிந்த விழியினில் அருவி பாய
நெய்யினில் முடித்த கூந்தல் நெல்குத்தும் கொடுமை காணா
மையினில் திகழ்வேல் கண்ணார் அரம்பையர் மறுகிச் சோர்ந்தா"

ஆ. "வடிஏறு வெற்றி நெடுவேல் மலர்க்கை
மகனோடு இறந்து மடியாக்
கொடியேன் முகத்தில் விழியார் முனிக்கு
வளநா(டு) அளித்த கொடையார்
இடியே(று) அடர்ந்த மரமாகி மண்ணின்
இடையே உழத்தல் அழகோ?
அடியேனை ஒக்க மடியாதிருத்தல்
அனியாயம் மிக்க யமனே!

இ. "அலை(வு) இலா அரிச்சந்திரற்(கு) அல்லது
தொலைவில் யாவற்கும் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதுவதோ என
உலையின் மீது மெழுகொத்(து) உருகினாள்"

3. பின்வருவனவற்றை விளக்குக.

1. அரிச்சந்திரனின் குணவியல்புகள்
2. சந்திரமதியின் குணவியல்புகள்

P.மாறன்

இங்கே மடிக்கவும்






**மாணவர் மலர்**


## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

◆ பின்வரும் சொற்களில் எழுத்துப் பிழையுள்ள சொல்லைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

(1) 1. கறுப்பு 2. உழவன் 3. நன்பன் 4. அரண்மனை
(2) 1. கூடிக்குலவி 2. இரவும்பகலும் 3. ஈடுஇணை 4. வறவுசெலவு
(3) 1. விளையாட்டு 2. வைத்தியசாளை 3. தபாலகம் 4. சுற்றுலா
(4) 1. மைதாணம் 2. பாடசாளை 3. நூலகம் 4. ஆய்வுகூடம்
(5) 1. தொழிலாளர் 2. அழிரப்பர் 3. சமுத்திரம் 4. விவசாயி


◆ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக

(6) 
இந்த உருவில் காணப்படும் சதுரங்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை யாது?

(7) 
இங்கு நிழற்றப்படாத முழு உருவின் என்ன பின்னம்

1. $\frac{3}{8}$ 2. $\frac{5}{8}$ 3. $\frac{3}{4}$ 4. $\frac{5}{4}$ (.....)

(8) எண்கோலங்களை அவதானித்து வெற்றிடத்திற்குரிய எண்ணைப் புள்ளிக்கோட்டில் எழுதுக





(9) நான் பாடசாலை செல்வது தங்கையுடனும், தம்பியுடனும் ஆகும். நான் அவர்களின் அக்கா அல்ல எனின், நான் அவர்களுக்கு என்ன முறை?

◆ குறியீடுகளின் நிறைகளுக்குச் சமனான நிறை களைக்கொண்ட குறியீடுகளை அவதானித்துக் கேட்கப்பட்ட வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையின் கீழ் கீறிடுக.

(10) □ இன்நிறை = △ இன்நிறை

△ இன்நிறை = ○○ இன்நிறை

இதன்படி கீழே உள்ள தராசுத்தட்டுகள் இரண்டும் சமநிறையில் இருப்பதற்குதராசின் வலப்பக்கத்தட்டில் சேர்க்கப்படவேண்டிய நிறையை உள்ளடக்கும் விடையின் கீழ் கோடிடுக.




(11) 1km தூரத்திற்குச் செல்வதற்கு வாடகைக்கு கார் ஒன்றுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 20.00 ஆகும். ரூபா 150.00 ஐ வைத்திருக்கும் காந்தன் வாடகைக் காரில் செல்லக்கூடிய ஆகக்கூடிய தூரம் எவ்வளவு?


1. 8km 2. 7km 3. 7.5km

(12) வேலியொன்றின் ஒரு நிரையில் 10 தூண்கள் நடப் பட்டிருந்தன. ஒவ்வொரு தூணுக்கும் இடையில் 3m தூரம் இடைவெளி விடப்பட்டிருந்தது. எனின் முதலாவது தூணிலிருந்து 10 ஆவது தூண் வரையான தூரம் எவ்வளவு?

1. 30m 2. 27m 3. 13m

(13) XIV=XVII+ □ கூட்டினுள் வரவேண்டிய உரோம எண் யாது?

1. XXIVIII 2. XL 3. XXXI

(14) 
சிறிய சதுரமொன்றின் பரப்பளவு 1 சதுர cm எனின் இவ்வுருவின் பரப்பளவு யாது?

1. 15 $cm^2$ 2. 16 $cm^2$ 3. 8$cm^2$

(15) செவ்வக வடிவமான விளையாட்டு மைதானத்தில் சுற்ற ளவு 700 m அதன் ஒரு பக்க 200 m எனின் அகலம் எத்தனை m ஆகும்?..........

◆ பின்வருவனவற்றிற்குச் சரியான விடையின் கீழ் கோடிடுக

(16) மின்சக்தியை வெப்பசக்தியாக மாற்றும் சாதனம்?
1. மின்னழுத்தி 2. மின்சூள் 3. மின்விசிறி

(17) வளியின் பண்பு அல்லாதது எது?
1. வளிக்கு இடத்தை அடைக்கும் தன்மை உண்டு.
2. நீரிலும் பார்க்க அடர்த்தி கூடியது.
3. வளிக்கு அமுக்கும் தன்மை உண்டு.

(18) மனித சக்தியினை மட்டும் கொண்டு இயக்கப்படும் உபகரணம் பின்வருவனவற்றில் எது?
1. புகையிரம் 2. முச்சக்கர வண்டி 3. தள்ளுவண்டி

(19) நீல வானிலே கரிய குருவி ஒன்று வேகமாகப் பறந்தது. இவ் வாக்கியத்திலுள்ள எழுவாய் அடைமொழி எது?
1. நீல 2. குருவி 3. கரிய

(20) உலகிலே உயர்ந்த மலைச்சிகரம் எது?
1. எவரெஸ்ற் 2. நைல் நதி 3. கிறீன்லாந்து

◆ பின்வரும் பிரச்சினைகளில் முதல் கூட்டிலுள்ள இரண்டு எண்களுக்குப்பதிலாக ஈடுபடுத்தக்கூடிய எண்களைக்கொண்ட கூட்டைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

(21) 14 + [10+12] =36


1. [10+15] 2. [10+11] 3. [20+12] 4. [20+2]

(22) 25 - [10+5] =10


1. [5+10] 2. [10+4] 3. [15-5] 4. [10+ 15]

(23) 1kg தேயிலையின் விலை ரூபா 140.00 ஆயின் 250 kg தேயிலையின் விலை யாது?


(24) இவ்வுருக்களில் மூன்று ஏதோ ஒருவகையில் ஒரே மாதிரியானவை. வித்தியாசமான உருவைத்தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.



(25) கடதாசியொன்றை பின்வருமாறு நான்காக மடித்து இரு துவாரம் இடப்பட்டிருந்தால், இக்கடதாசியை




விரித்தால் எவ்வாறு தோற்றமளிக்கும் என்பதைச் சரியாக காட்டும் உருவின் கீழ் கோடிடுக.



1. 2. 3. 4.

◆ பின்வரும் உருவை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.



(26) வீட்டின் கதவின் மீது X அடையாளமிடுக.


(27) தென்னையிலுள்ள தேங்காயைச் சுற்றி வட்டமிடுக.

(28) பூனையின் கழுத்தின் மேலாக சிறிய கோடொன்று இடுக.

(29) பூனை எங்கே காணப்படுகிறது என எழுதுக.

(30) பின்வரும் உருவில் காணப்படும் எண்சட்டம் காட்டும் எண் யாது?


(31) 10 ☐ 20 ☐ 15 = 15 வெற்றுக்கூட்டினுள் பொருத்தமான கணித அடையாளங்களை (குறியீடுகளை) இடுக.






32. பின்வரும் வீதிச்சமிக்ஞைகள் குறியீட்டு வடிவில் தரப்பட்டுள்ளன. அவை குறிப்பிடும் கருத்தை எழுதுக.





◆ பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள படங்களுக்கு அமையப் பொருத்தமற்ற படத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


34.

1 2 3 4


35.

1 2 3 4

36.

1 2 3 4

37.

1 2 3 4

◆ கீழே தரப்பட்டுள்ள ஐந்து படங்களில் இரண்டு படங்கள் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையன. அவ்வாறான இரு படங்களைத் தெரிவுசெய்து அவற்றின் கீழ்க் கோடிடுக.

38.

1 2 3 4 5

39.

1 2 3 4 5

40.

1 2 3 4 5

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்



(1) பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக?

மனிதனுட்பட உயிரினங்கள், தாவரங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இன்றியமையாத நீர் , எமது பாரிய சொத்தாகும். அன்றாடம் உயிர்வாழும் அனைத்துக்கும் நீர் அத்தியாவசியம் ஆகின்றது. மனிதனைப் பொறுத்தவரையில் வாழ்வதற்கு மட்டுமன்றி வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் நீர் தேவைப்படுகின்றது. இயற்கையாகக் கிடைக்கும் நீரைப் பேண வேண்டியது எமது தலையாய கட்மையாகும்.

நீர் இயற்கையைப் பேணுகின்றது. அழகுபடுத்துகின்றது கண்களைக் கவரும் நீர்வீழ்ச்சிகள், நீரினாலே தோன்றியவையாகும். நாம் வாழும் பூமியில் 75 வீதம் நீரிலானது. மழையும் நீரினாலே தான் கிடைக்கிறது. தொழில் நுட்ப வளர்ச்சியால் நீர் மாசடைகிறது.

காடழிப்பினால் நீர் வற்றிப் போய்க் கொண்டிருக்கிறது. இந்த விடயங்களை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். இவ்வாறு நீரற்றுப் போகும் நிலை ஏற்படின் உயிர்கள் வாழ இயலாது. எனவே நாம் நீரைப் பேணிப் பாதுகாப்போம்.

1. நீர் என்பதன் ஒத்தகருத்துச் சொல் ஒன்று தருக?

2. இயற்கை என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ஒன்று தருக?

3. உயர்திணை, பலர்பால், பன்மை, தன்மை, எதிர்கால வினை முற்றுச் சொல் ஒன்று தருக?

4. தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல் ஒன்று தருக?

5. 'இன்றியமையாத' என்பதால் கருதப்படுவது யாது?

6. இலங்கையிலுள்ள கண்ணைக் கவரும் நீர் வீழ்ச்சிகளில் உயரமானது எது?

7. 'வாழ்வதற்கு மட்டுமன்றி வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் நீர் தேவைப்படுகிறது' இங்கு குறிப்பிடப்பட்ட வாழ்க்கைத் தேவைக்கு நீர் பயன்படும் வழிகளில் ஒன்றினை எழுதுக?

8. கிணறு, குளம் தவிர்ந்த நீரைப் பெற்றுக் கொள்ளும் வழிகள் இரண்டு எழுதுக?

9. பந்தியில் குறிப்பிடப்படாத, நீர் மாசடையும் வழி ஒன்று எழுதுக?

10. மாசடைந்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய் ஒன்று தருக?

(2) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக?

1. வேளைக்கே / திரும்பினான் / முடித்து / வேலை / வீடு

2. உருவாகிறது / நீர்வீழ்ச்சி / மலை / உச்சியிலிருந்து

(3) பின்வரும் தொடர்களின் கருத்தினைப் புலப்படுத்தும் பழமொழியினை எழுதுக?

1. செருப்பில்லையென்று ஏங்குபவன் காலில்லாதவனைப் பார்த்து ஆறுதல் அடைவான்? ..............................

2. எந்தக் கருமத்தைச் செய்யும் போதும் அளவுடன் செய்ய வேண்டும்?

(4) பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக?

1. நீர் :- ..............................
2. கண்கள் :- ..............................
3. மாணவன் :- ..............................
4. மனிதன் :- ..............................

(5) பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் தமிழ் கருத்தை எழுதுக?

1. Rainbow :- ..............................
2. Beautiful :- ..............................
3. We :- ..............................
3. Blue :- ..............................

(6) சரியான விடையின் கீழ் கீறிடுக


1. பின்வருவனவற்றுள் சிறகுடைய வித்து அல்லாதது?
1. மலைவேம்பு 2. துணுக்கு 3. முக்குத்திப்பூண்டு

2. உணவு சமைக்கும்போது அவற்றின் போசனைப் பதார்த்தங்கள் அழியக் கூடிய சந்தர்ப்பமானது?
1. கீரை வகையைக் கழுவி வெட்டுதல்.
2. பீற்றூட் வெட்டி அவித்தல்.
3. வெண்டிக்காயை கழுவி வெட்டுதல்.

3. பின்வரும் பிராணிகளுள் சமுகமாக வாழும் பிராணி அல்லாதது?
1. கறையான் 2. எறும்பு 3. பூனை

4. வெடிபலவன் பூவின் நிறம் என்ன?
1. ஊதா 2. சிவப்பு 3. வெள்ளை

5. தையலை அலங்காரத்துக்காகப் பயன்படுத்தும் முறைகளில் ஒரு தையல் முறை கீழே காணப்படுகிறது. இத்தையலின் பெயர் யாது?
1. மீன் முள்ளுத்தையல்
2. வெட்டுக்குத்துத் தையல்
3. கம்பளித்தையல்
4. சங்கிலித் தையல்



6. பின்வருவனவற்றுள் இரும்புச் சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
1. தொண்டைக்கரப்பான் 2. நீரிழிவு 3. இரத்தச்சோகை

7. பின்வரும் விடைகளுள் தேசப்படங்களில் நதியினைக் காட்டுவதற்குப் பயன்படுத்தும் நியம நிறம் எது?
1. கறுப்பு 2. சிவப்பு 3. நீலம்

8. தினமும் பயணம் செய்பவர்கள் இலங்கை போக்குவரத்துச் சபையில் குறைந்த கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பயணச்சீட்டு?
1. பருவக்காலப் பயணச்சீட்டு
2. புகைவண்டிப் பயணச்சீட்டு
3. பஸ்வண்டிப் பயணச்சீட்டு

9. மூங்கில் தாவரம் எவ்வகையைச் சேர்ந்தது.
1. செடி 2. புல் 3. மரம்

# உப அஞ்சல் அலுவலகத்தை மீளத் திறக்குமாறு கோரிக்கை

கிளாலி உப அஞ்சல் அலுவலகத்தை மீளத்திறக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளாலிப் பகுதியில் 2000 ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன்னர் இயங்கிவந்த உப அஞ்சல் அலுவலகம் - 2000 ஆம் ஆண்டு இடம்பெயர்வின் பின்னர் சிறிதுகாலம் இடம்மாறி கரவெட்டியில் இயங்கிவந்தது. 2001 ஆம் ஆண்டு இந்த உப அஞ்சல் அலுவலகத்தின் அஞ்சலதிபர் ஓய்வு பெற்றதையடுத்து அந்த அஞ்சல் அலுவலகம் மூடப்பட்டது.

இந்தக் கிராமத்தில் மீளக்குடியேற இராணுவம் அனுமதிக்காமை காரணமாக, இந்தக்கிராம மக்கள் அயற்கிராமமான அல்லிப்பளை; புலோப்பளை ஆகிய கிராமங்களில் குடியேறியுள்ளனர்.இரு கிராம சேவகர் பகுதிகளில் குடியேறியுள்ள கிளாலிக் கிராம மக்கள் தமது இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கு வசதியாக தமது கிராமத்துக்கு ஏற்கனவே இயங்கி, பின்னர் மூடப்பட்டுவிட்ட உப அஞ்சல் அலுவலகத்தை மீளவும் புலோப்பளை அல்லது அல்லிப்பளை கிராமங்களில் பொருத்தமான ஒரு இடத்தில் மீளத்திறந்துதருமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், வடமாகாண அஞ்சல் மா அதிபர் ஆகியோரிடம் மகஜர்மூலம் கடந்த ஒரு வருடகாலமாக வேண்டுகோள் விடுத்துவருகின்றனர்.

இந்திவிடயம் தொடர்பாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர், பளை அஞ்சல் அதிபருக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்தக்கிராம மக்கள் ஒப்பமிட்டு, தமது பகுதியில் உப அஞ்சல் அலுவலகத்தை மீளத்திறக்க உதவுமாறு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (31)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : அ. விமல்தாஸ் (சாஜஹன்)
முகவரி : 10 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

இரண்டாவது அகவையில்



பெயர் : ந. வதனி
முகவரி : அச்சுவேலி


# நல்லை ஆலய வீதி மணலில் கிருமிகள் உள்ளனவாம்

நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சூழலில் போடப்பட்டுள்ள மணலில் கிருமிகள் உள்ளனவாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் ஆலய உற்சவ காலத்தில் அங்கப் பிரதட்சணை செய்யும் பக்தர்களின் உடலில் தோல் வியாதிகள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான நோய்களுக்குள்ளானோர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர். கடந்த இரு வருடங்களாக இவ்வாறு நல்லூர் ஆலயச் சூழலில் போடப்படும் மணலால் பல்வேறு தோல்நோய்கள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (111)

# யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிழக்குக்கு விஜயம் செய்யவுள்ளனர்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பகுதிகளுக்குச் சென்று, மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளனர்.

மூதூர்ப் பகுதிக்குச் செல்லும் இவர்கள் வவுனியா, மன்னார் போன்ற பகுதிகளுக்கும் செல்லவுள்ளனர். அங்கு பொதுமக்கள், அரச அதிகாரிகள் பொதுஜன அமைப்புக்கள் என்பவற்றினையும் சந்தித்து உரையாடவருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் இரவிராஜ் தெரிவித்தார். (29)

# உள்ளூராட்சி மன்றங்களின் தரம் குறித்து ஆராய்வு

உள்ளூராட்சிவலகள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சினால்சிறந்த உள்ளூராட்சி சபைகள் மற்றும் நகரசபைகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய வவுனியாவில் உள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த குழுவினர் வட-கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு விஜயம் செய்து அவற்றின் தரம் பற்றி மதிப்பீடு செய்து வருகின்றனர்.

எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த பிரதேச சபைகளுக்கான தெரிவுகள்-மாவட்ட மட்டத்தில் இடம்பெற்று பின்னர், தெரிவு செய்யப்படும் பிரதேச சபைகள் மாகாண மட்டத் தெரிவுக்கு உட்படுத்தப்படும். மாநகர மற்றும் நகர சபைகளுக்கான தெரிவுகள் மாகாண மட்டத்தில் இடம்பெறவுள்ளது.



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பிரதேசசபைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் மானிப்பாய் பிரதேச சபை அணித் தலைவர் வெற்றிக் கிண்ணத்தை - பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவிடம் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (91)

# துணைவேந்தரை அடைத்துவைத்ததை ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது!

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி ஒருவரின் பிரச்சினை தொடர்பாக, துணைவேந்தரின் அலுவலகத்துக்குச்சென்ற சிலர் துணைவேந்தரை அவரது அலுவலகத்துக்குள் ஐந்து மணித்தியாலங்களாக அடைத்து தடுத்து வைத்தமையை, பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதாக ஒன்றியம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தரையோ, வேறு எந்த அதிகாரிகளையோ அல்லது வேறு எவரையுமோ இவ்வாறு அடைத்து வைப்பது குற்றமென்பதுடன், ஓர் அடிப்படை மனித உரிமை மீறலுமாகும்.

இவ்வாறான அத்துமீறிய செயல்களை மேற்கொண்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படல் வேண்டும் என்பதை எமது ஒன்றியம் வலியுறுத்துகிறது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாஷையூர் கிழக்கு, மேற்கில் செயலக நடமாடும் சேவை!

பாஷையூர் கிழக்கு, பாஷையூர் மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு வாக்காளர் இடாப்பில் பெயர் சேர்த்தல், தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற சேவைகளுக்கான நடமாடும் சேவையொன்று நாளைமறுதினம் காலை 9 மணிக்கு பாஷையூர் குருமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் வசமுள்ள ஆவணங்களுடன் சமூகளித்து இந்தச் செயன்முறையின் உச்சக்கட்டப் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளுமாறும், ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

# அடைக்கல அன்னை நவநாள் திருப்பலி

யாழ்.அடைக்கல மாதா தேவாலய வருடாந்த நவநாள் கொண்டாட்டங்கள் கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தினமும மாலை 5.30 மணிக்கு நோவினை ஆராதனைகள் இடம்பெறும்.

5 ஆம் திகதி காலை 8 மணிக்கு முதல்நாள் திருப்பலி சிறப்பாக நடைபெறவிருக்கிறது. 7 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நற்பிரசாத திருநாள் அனுஷ்டிக்கப்படும். மறுநாள் 8 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி நடைபெறும். மாலை 5.30 மணிக்கு தேர்ப்பவனி நடைபெற்று இறுதியில் ஆசீவாதம் வழங்கப்படுவதுடன், திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவடையும். (206)

# சின்னஞ்சிறு செய்திகள்

## மனித உரிமை ஊக்குவிப்பாளர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மனித உரிமை ஊக்குவிப்பாளர்களுககான மாதாந்தக் கருத்தரங்கும், கூட்டமும் இன்று காலை 9 மணி முதல் 4.30 மணிவரை வை.எம.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட அரச அதிபர், திட்டப் பணிப்பாளர், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் உத்தியோகத்தர் மற்றும் யுனிசெவ், யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள் ஆகியோர் உரைநிகழ்த்தவுள்ளனர்.

## கல்விக்கோட்டம் இடமாற்றம்

சாவகச்சேரி வீதியில் இயங்கி வந்த தென்மராட்சிக் கல்விக்கோட்டம் தற்போது டச்சுவீதி சாவகச்சேரியில் இயங்க ஆரம்பித்துள்ளது. (29)

## அம்பாள் சனசமூக நிலையத்துக்கு நிரந்தர கட்டடம்

சங்கானை நாகலிங்க சுவாமிகள் வீதியில் நிரந்தரக் கட்டடம் இன்றி இயங்கிவந்த அம்பாள் சனசமூக நிலையத்துக்கு ஊர்மக்களதும், இந்தப் பிரதேசத்திலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்பவர்களின் உதவியுடன் சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலய சூழலில் நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு கட்டடவேலைகள் நடைபெறுகின்றது. (47)

## தடுத்துவைக்கப்பட்டிருந்த சாரதி விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக தடுத்துவைக்கப்பட்டிருந்த சாரதி ஒருவர் கடந்த 28 ஆம் திகதி யாழ்.சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த சாரதி மதுபோதையில் வாகனத்தை வேகமாகச் செலுத்தியதால், அவரைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்திருந்தனர். இதனால், அவருக்கு 2 மாத சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

எனினும் கடந்த சனிக்கிழமை அவருக்கான தண்டனைக்காலம் முடிவடைந்ததால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

## வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க கருத்தரங்கு

குடாநாட்டு மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக தேசிய நூலக ஆவணங்கள் சபை மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் ஆகியன இணைந்து 5 நாள் கருத்தரங்கு ஒன்றை ஆரம்பித்துள்ளன.

யாழ்.பொதுநூலகத்தில் இடம்பெற்றுவரும் இந்தக் கருத்தரங்கின் முதல்நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

## அஞ்சல் தந்தி சங்கத்தின் ஆண்டுவிழா

(கொழும்பு)

இலங்கை அஞ்சல் தந்தி தொடர்புகள் சேவையாளர் சங்கத்தின் 55 ஆம் ஆண்டுவிழாவும், 46 ஆவது பிரதிநிதிகள் மாநாடும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி பதுளையில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் மேலதிக கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு யாழ்.மாவட்ட அஞ்சல் கிளையாளர் முன்வைக்கவுள்ளனர். (64)

## காவலரண் விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள வடமாகாண தபால் அத்தியட்சகர் அலுவலக வளவில் காணப்படும் இராணுவக் காவலரண் விஸ்தரிக்கப்பட்டுவருகிறது.

ஆரம்பத்தில் ஈ.பி.டி.பியின் பாதுகாப்புக்கென அங்கு காவலரண் ஒன்று நிறுவப்பட்டது. தற்போது அதுவே படங்குகள் மூலம் அடைக்கப்பட்டு முகாம்போல அமைக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் அச்சத்துக்குளாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (111)

## புனரமைப்பு வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

இரண்டாம் நிலை புதிய கல்வித் திட்டத்தின் கீழ் வட-கிழக்கு பகுதிகளிலுள்ள 54 மத்திய கல்லூரிகளில் அவசர புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளவென 27 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை ஒன்றுக்கு 5 லட்சம் ரூபா என்ற அடிப்படையில், பாடசாலை அதிபர்களின் சிபார்சின் அடிப்படையில் அவசர வேலைத்திட்டங்களைச் சமர்ப்பிக்க அரசு கோரியுள்ளது. (14)

## மஹா கும்பாபிஷேகம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு கலட்டியம்பதி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு பிரதமகுரு சிவஸ்ரீ பஞ்சாட்சர பால சுப்பிரமணியக் குருக்கள தலைமையில் இடம்பெறவுள்ளது.

முன்னதாக 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தலும், மறுநாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு முருகப்பெருமானின் திருக்கல்யாணமும் இடம்பெற்று, திருவீதியுலாக் காட்சியும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (99)

## மந்துவில் கிழக்கு வீதி திருத்தப்படவுள்ளது

(சாவகச்சேரி)

மந்துவில் கிழக்கு கோசிகையடி வீதி, மந்துவில் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளது. இந்த வீதி மணல் வீதியாக இருப்பதனால், இந்தப் பாதையூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் இடர்களை எதிர்நோக்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தெய்வீக இசையரங்கு

(நல்லூர்)

நல்லூர் கந்தசாமி கோயில் உற்சவ காலத்தை முன்னிட்டு, நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணியிலிருந்து 7.30 மணிவரை தெய்வீக இசையரங்கின் 12 ஆம் நாள் நிகழ்வு நடைபெறும்.

இதில் பாட்டு எஸ்.இராமநாதன், வயலின் - எஸ்.திவாகரன், மிருதங்கம் கே.அனந்தகோபன், கடம் ஏ.செல்வரத்தினம் ஆகியோரால் நிகழ்த்தப்படும். (100)

## திறப்பு விழா

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணியில் அமைக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பணிமனைத் திறப்புவிழா எதிர்வரும் 4 ஆம திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

# வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் மீண்டும் கடற்படையினர் கெடுபிடி

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடற்படையினரின் கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள் கடந்த சில நாட்களாக அதிகரித்துக் காணப்படுகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கு ஆழ் கடலில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த கட்டைக்காடு அ.யோசே எட்வேட் என்பவருக்கு சொந்தமான படகுக்கு அண்மையில் வந்த கடற்படையினர் படகை நோக்கி சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர். பின்னர் வலைகளை விட்டு விட்டு உடனடியாகக் கரைக்கு திரும்புமாறு அச்சுறுத்தல் விடுத்ததைத் தொடர்ந்து, தொழிலாளர்கள் உடனடியாகவே கரைதிரும்பினர்.

மறுநாள் சனிக்கிழமை இரவு அதே கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்ட கட்டைக்காடு கிராமத்தைச் சேர்ந்த யே.ஜெயக்குமார் என்பவரின் படகுக்கு அண்மையில் சென்ற கடற்படையினர் பிரகாசமான வெளிச்சத்தைப் போட்டு படகை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தபின் உடனே கரைதிரும்புமாறு உத்தரவிட்டதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் உடனடியாகக் கரைதிரும்பினர்.

கடலில் விடப்பட்ட வலைகள் வெகு சிரமத்தின் மத்தியில் இரண்டு நாட்களின் பின் கண்டுபிடிக்கப்பட்டது.

கடற்படையினரின் கெடுபிடிகள், அச்சுறுத்தல் காரணமாக கடற்தொழிலாளர்கள் ஆழ்கடல் தொழிலுக்குச் செல்வதற்கு அஞ்சுகின்றனர். (21)

# கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்ற பரிசளிப்பு விழாவும், கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றத்தின் நடத்திய அழகெழுல் கலைத்துறை சார் போட்டி நிகழ்வின் பரிசளிப்பு விழாவும், கண்காட்சி நிகழ்வும் எதிர் வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை இந்தக் கல்லூரியின் புதிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முகிழ்நிலை ஆசிரியர் சி.சிவானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியமும், கலைநிதி குழந்தை ம.சண்முகலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# எழுதுமட்டுவாள் அரசினர் பாடசாலையை சொந்த இடத்தில் இயக்குமாறு கோரிக்கை

(எழுதுமட்டுவாள்)

எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையை மீளவும் சொந்த இடத்தில் இயக்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது குறித்து இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

குறித்த பாடசாலை கடந்த பல வருடங்களாக எழுதுமட்டுவாள் றோமன் கத்தோலிக்க பாடசாலையோடு இணைந்தே இயங்குகின்றது. இதனால் குறித்த பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இந்தப் பாடசாலையை உரிய இடத்தில் இயக்குவதற்கான நடவடிக்கையை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (29)

# புலிகளின் ஆயுத பலம் மூலம்தான் சமாதான பேச்சுக்கள் ஆரம்பமாகின

## —மாவை சேனாதிராசா தெரிவிப்பு—

ஆயுத பலத்தின் மூலமாகத்தான் ஜனநாயக ரீதியான பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலக்கப்பட்ட கருணாவை வைத்து சாதிக்க நினைத்த அரசு பல சதித்திட்டங்களைத் தீட்டிய அரசு பேச்சுவார்த்தை என்ற போர்வையில் வஞ்சகமாகச் செயற்படுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

ஞானவீர சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு விழாவும், அங்கத்தவர் கௌரவிப்பும், பரிசளிப்பு நிகழ்வும் நிலையத் தலைவர் சு.ம.இராஜேந்திரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலையத்தில் இடம்பெற்றது.


இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர் -

தமிழ்மக்களுடைய தமிழ்த் தேசியத்தினுடைய உணர்வுகளும், போராட்ட வெளிப்பாடுகளும் அவர்களது இறுதி இலட்சியமும் தமிழ் என்ற காரணத்தினால் அதன் கட்டமைப்பால், அதன் பெயரால் பல வெற்றிகளைப் பெற்றுள்ளோம். இன்று ஜனநாயக ரீதியாகப் பேசிவருகிறோம்.

போரினால் பாதிக்கப்பட்டாலும், நாம் வாழவேண்டிய சமூகம், எம்மை நாங்களே ஆளுகின்ற சமூகம் என்பதால் எம்மை நாங்களே ஆளுகின்ற வரைக்கும் ஒற்றுமையாக, ஒன்றிருந்து ஒரே இலட்சியமாக வாழ்ந்து காட்டவேண்டும்.

இந்த நிலையத்தால் நடத்தப்பட்ட போட்டிகளும், வழங்கப்பட்ட பரிசில்களும் எமது தாயக வீரர்களை படைப்பாளிகளை, கல்விமான்களை இனங்காட்டுவதாகவே நான் பார்க்கின்றேன்.

இந்தச் சமூகத்தினது ஒற்றுமையே 60 ஆவது ஆண்டுகள் நிறை



வில் இந்த மாதிரியான விழாவுக்குக் காரணம் எனலாம் என - தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறையைச் சேர்ந்த பூமகள், செழியன், பிரதேச செயலர் பொ.வைரமுத்து, கூட்டுறவு சபைத் தலைவர் பெ.கனகசபாபதி ஆகியோர் கலந்துகொண்டனர். (91)

# சமுர்த்தி வங்கியில் திருட்டு முயற்சி!

பருத்தித்துறையிலுள்ள வலயம் 2 இன் சமுர்த்தி வங்கி கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று இனந்தெரியாதோரால் கதவுகள் உடைக்கப்பட்டு பணம் சூறையாட முயற்சி எடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

வங்கியின் பின்பக்கக் கதவுகள் உடைக்கப்பட்டு, முகாமையாளரின் அறையிலுள்ள பணம் வைக்கும் இரும்புப் பெட்டகத்தின் அடிப்பகுதியையும் உடைத்து பணத்தை சூறையாட முயற்சி செய்தனர்.

ஆனால், அதில் பணம் இல்லாததால் திருடர்கள் ஏமாற்றத்துடன் சென்றுவிட்டனர்.

மறுநாள் சமுர்த்தி வங்கி ஊழியர்கள் வந்து பார்த்தபோது, கதவுகள் உடைக்கப்பட்டு இருப்பதை அறிந்து - பருத்தித்துறை பொலிஸாரிடம் முறையிட்டனர்.

பொலிஸார் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டு விசாரணை முடியும்வரை அந்த அறையினுள் செல்லவேண்டாம் எனவும் உத்தரவிட்டனர்.

இது தொடர்பாக பருத்தித்துறை பிரதேச செயலாளர், சமுர்த்தி தலைமைக் காரியாலயம் என்பவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை சமுர்த்தி 2 இன் முகாமையாளர் தி.யோகேந்திரன் தெரிவித்தார். (12)

# கோண்டாவில் டிப்போவுக்கு மேலும் 15 பஸ் வண்டிகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சேவைகளில் ஈடுபடுத்துவதற்கென மேலும் 15 பஸ் வண்டிகள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்.பிராந்திய அலுவலகமான கோண்டாவில் டிப்போவுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டில் சேவைகளை நடத்துவதற்கென, தற்போதுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை போதாதிருப்பதால் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் விதமாக - புதிய பஸ்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டுமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இதன் விளைவாகவே இவ்வாறு மேலும் 15 பஸ் வண்டிகள் யாழ். மாவட்டத்துக்கு வழங்க, போக்குவரத்து அமைச்சு முன்வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# ஒழுங்கமைக்கப்பட்ட பாடத் திட்டம்; முன்பள்ளிகளுக்கும் அறிமுகமாக்குக

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வலியுறுத்து

யாழ்.குடாநாட்டில் இயங்கிவரும் முன்பள்ளிகளுக்கு, ஒழுங்கமைக்கப்பட்ட பாடத்திட்டம் இல்லாமையால் ஒவ்வொரு முன்பள்ளிகளிலும் வெவ்வேறு முறையில் கற்பிக்கப்படுகிறது.

ஆகவே அரசு ஒழுங்கமைக்கப்பட்ட பாடத்திட்டமொன்றை அமுல்படுத்தவேண்டுமென, யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வலியுறுத்தியுள்ளது.

யாழ்.குடாநாட்டில் சுமார் 800 வரையிலான முன்பள்ளிகள் இயங்கி வருகின்றபோதும், இவற்றிற்கென ஒழுங்கமைக்கப்பட்ட பாடத்திட்டங்கள் எதனையும் அரசு அறிமுகம் செய்யவில்லை.

இதனால் ஒவ்வொரு முன்பள்ளிகளிலும் ஒவ்வொரு விதமான கற்பித்தல் முறைகள் பின்பற்றப்படுகின்றன.

இதன் காரணமாக முன்பள்ளிகளில் பயின்ற சிறார்கள், பாடசாலை கல்வியில் இணையும்போது அவர்களுடைய கல்வி வளர்ச்சியில் பாரியளவு வேறுபாடுகள் ஏற்பட்டு வருகின்றமையைச் சுட்டிக்காட்டியே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (17)

# ஒரு லட்சத்து 35 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள ஒரு லட்சத்து 35 ஆயிரம் குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதை நடைமுறைப்படுத்துவதற்கு உலக உணவுத்திட்டத்தின் கீழ் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

20 வருட காலமாக அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் ஊடாக இந்த நிவாரணம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றாவிடில் போராட்டம்

## தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் எச்சரிக்கை

தென்மராட்சி மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுமாறும், இல்லையேல் இப்பிரதேச மக்களும், பொது அமைப்புக்களும் இணைந்து தென்மராட்சிப் பிரதேசத்தின் சகல அரச நிர்வாகச் செயற்பாடுகளையும் பிரதான போக்குவரத்தையும் ஸ்தம்பிக்கச் செய்வதற்கான தொடர் வெகுஜனப் போராட்டத்தில் ஈடுபட ஆயத்தமாவதாக தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தென்மராட்சி பிரதேசத்தில் மக்களின் குடியிருப்புப் பிரதேசங்களையும், வீடுகளையும் தொடர்ந்தும் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருப்பதனால் இப்பிரதேச மக்கள் எதிர்நோக்கிவரும் இன்னல்களையும், நெருக்கடிகளையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிக்கைகள் மூலமாகவும், போராட்டங்கள் வாயிலாகவும் தங்களுக்கும், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்திலுள்ள பெரும் நிலப்பரப்பு அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களின் பாவனைக்குத் தடுக்கப்பட்டிருப்பதுடன், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்காத பகுதிகளையும் வீடுகளையும் கூட இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்துள்ளனர். இதனால் இக்குடியிருப்பு மக்கள் வீடு வாசல்கள் அற்று அகதி வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக உசன் பகுதியில் பல வீடுகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி தனிப்பட்ட வீடுகள் யாவும் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவேண்டியது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

உடன்படிக்கை கைச்சாத்தாகி இரண்டரை வருடங்கள் ஆகியும் - வீட்டு உரிமையாளரிடம் அவை கையளிக்கப்படவில்லை. இராணுவத்தினரின் இந்தச் செயற்பாடு பாரிய யுத்த நிறுத்த மீறல் என்பதை தாங்கள் அறிவீர்கள்.

இந்த விடயம் தொடர்பாக உசன் பகுதி மக்கள் தங்களுக்கும், தளபதி, உசன் பகுதி இராணுவப் பொறுப்பதிகாரி ஆகியோருக்கும், அரச அதிபருக்கும் என சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டும் எந்தவித பயனுமில்லாத நிலையில் கடந்த 2004.08.09 ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலகத்தின்முன் மறியற் போராட்டம் ஒன்றையும் நடத்தி தமது இருப்பிடங்களை தம்மிடம் கையளிக்குமாறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அத்துடன் - அவர்களது கோரிக்கை நிறைவேறாதவிடத்து 2004.08.25 தொடக்கம் மறியற் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் தங்களுக்கு அறிவித்திருந்தனர். இன்றுவரை அவர்களது கோரிக்கைக்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை என்பது மிக வருத்தத்திற்குரிய ஒரு விடயமாகும்.

இதேபோல தென்மராட்சிப் பிரதேசத்தில் தளங்களப்பு, மறவன்புலவு, எழுதுமட்டுவாள், கரம்பகம், ஒட்டுவெளி போன்ற பல பகுதிகளில் வாழ்ந்து தற்போது அகதிகளாக அலைந்துகொண்டிருக்கும் மக்களும் தமது வாழ்விடங்களில் வாழவிடுமாறு எத்தனையோ தடவைகள் பல்வேறு வழிகளில் வேண்டுகோள் விடுத்தும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

சுதந்திரமாக கடற்தொழிலை மேற்கொள்ள அனுமதிக்குமாறு - கோயிலாக்கண்டி மக்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கும் சாதகமான பதில் இதுவரை இல்லை.

இவையாவும் யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயல்கள் என்பவற்றுக்கு மேலாக, ஒரு ஜனநாயக நாட்டில் ஒவ்வொரு குடிமகனதும் அடிப்படை உரிமையைக் குழிதோண்டிப் புதைக்கும் செயல் என்பதையும் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விண்ணப்பம் கோரல்

யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரி பட்டப்படிப்புகள் அலகில் 2003/2004 ஆம் ஆண்டுக்கான வர்த்தக முதற் தேர்வு, கலை முதற் தேர்வு, நுண்கலைமானி ஆகிய கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கற்கை நெறிக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் - க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் எதிர்வரும் ஒக்ரோபர் 29 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கமுடியும் என யாழ். பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்தார். (72)

### கோப்பாய் - கைதடி வீதி நீண்டகாலமாக திருத்தப்படவில்லை

கோப்பாய் சந்தி ஊடாக கைதடிக்குச் செல்லும் பிரதான வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளதால், போக்குவரத்துச் செய்யமுடியாது இருப்பதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். வலிகாமத்திலிருந்து தென்மராட்சிக்குச் செல்லும் பிரதான வீதி இதுவாகும்.

தென்மராட்சி வியாபாரிகள், பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்களின் பாவனைகூடிய வீதியாக இந்த வீதியே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்துஒக்க சீர்த்த இடத்து*

திருக்குறள்

# நமது நோக்கு

## தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரின் வரலாற்றுக் கடமைப் பொறுப்பு

தமிழ் மக்களின் போராட்டம், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசியல் ரீதியில் ஒரு தீர்க்கமானதும்- சிக்கலானதும்- அதே சமயம் அடுத்த கட்ட நகர்வு முன்னெடுப்புக்கு தயாராகவேண்டிய அவசியம் குறித்தும் சிந்திக்கவேண்டியதுமான கட்டத்தை எட்டியுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைபபின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு தமது அரசியல் பணிகளை மேற்கொள்ளவேண்டுமென்பதை திட்டமிட்டு ஒழுங்கமைக்க வேண்டியது அவசியமாகியுள்ளது.

நீண்ட காலத்தின் பின்னர், பொதுத்தேர்தல் ஒன்றில் போட்டியிட்டு அதுவும், தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி அதனை வலுப்படுத்துவதையே ஒரே இலட்சிய நோக்காகக்கொண்டு போட்டியிட்டு அதற்கான மக்கள் ஆணையை முழுமையாகப் பெற்று வெற்றிகண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் இனியும் முன்னர் போன்று சராசரி அரசியல் வாதாட்டம் செய்யும் கட்சி அரசியல்வாதியாக இயங்குவதில் அர்த்தம் இருக்கப்போவது கிடையாது என்பதை உணர்ந்தவர்களாகவே, இருப்பர் என்பதில் ஐயமில்லை.

எனினும் சில விடயங்கள் குறித்து வெளிப்படையாகக் கூறுதல் ஒரு அவசியமாகியும்...

இலங்கையின் தேர்தல் முறையும், நாடாளுமன்ற அரசியல் நடவடிக்கைகளின் தன்மையும் பெரும்பான்மையின அரசியல் தலைமைகளின் அபிலாஷைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்படும் ஒன்றாகவே தொடர்ந்தும் பேணப்பட்டு வருகையில், அவை அவற்றின் ஜனநாயகத் தன்மையை முற்றிலும் இழந்துவிட்டது என்றே கூறவேண்டும்.

அடக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட - இன அடிப்படையில் - மொழி மற்றும் மத அடிப்படையில் ஓரங்கட்டப்பட்ட நிலையில் சிறுபான்மைச் சமூகத்தவரின் ஜனநாயக உரிமைகள் குறித்த குரல்கள் புறக்கணிக்கப்பட்டு நிராகரிக்கப்படும் தன்மையானது, இலங்கை நாடாளுமன்றத்தின் மரபாகவே அடையாளப்படுத்தப்பட்ட சூழலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரின் நாடாளுமன்றப் பணி முக்கியத்துவமிக்க ஒன்றாகியுள்ளது.

வெறுமனே சராசரி சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர்களாக தம்மைக் கருதாது, தமிழ்த் தேசியத்தை பாதுகாக்க, தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளை வென்றெடுக்க, பேரினவாத சக்திகளுக்கெதிராக ஜனநாயக ரீதியில் நாடாளுமன்றில் குரல் கொடுத்துப் போராடும் அரசியல் போராளிகளாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட வேண்டிய பொறுப்புடையவர்களாகியுள்ளனர்.

பேட்டி கொடுத்தல், அறிக்கைகள் விடுத்தல், விழாக்களை அலங்கரித்தல், வாக்குறுதிகளை வழங்கல் என்ற வகையிலான சராசரி மூன்றாந்தர நாடாளுமன்ற உறுப்பினர்களின் 'விலாச' நடவடிக்கைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு உரியதல்ல என்பதை புரிந்துகொண்டு, மக்கள் சேவையில் தம்மை முழுமையாக இணைத்துக்கொண்டு முழுமையான இன விடுதலையை வென்றெடுக்கும் அரசியல் பணிகளை தீவிரப்படுத்த வேண்டிய தருணம் இதுவேயாகும்.

ஒருமித்த சிந்தனை, ஒருமித்த கருத்துவேறுபாடு, ஒருமித்த செயற்பாடு என்று ஒன்றுபட்ட குறிக்கோளுடன் இயங்கினால் மட்டுமே மக்கள் அவர்களுக்கு அளித்த ஆணையை மதித்து அவர்களால் செயற்படமுடியும் என்பதை வலியுறுத்திக் கூறவேண்டியது இங்கு அவசியமாகின்றது.

சமகால அரசியல் தளத்தில் வலுவாக நிலைகொண்டு எதிர்கால அரசியல் செயற்பாடுகள் குறித்து திட்டமிட்டு தெளிவான இலக்குடன் விழிப்புணர்வு கொள்ளவைத்து மேற்கொள்ளவேண்டிய காலகட்டத் தேவையை உணர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்படவேண்டுமென்பதே, தமிழ்மக்களினதும், தமிழ்த் தேசிய தலைமையினதும் எதிர்பார்ப்பாகும்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவும் தமிழ்த் தேசியம் குறித்த சரியான விளக்கத்தை தெளிவாக எடுத்துரைக்கவும், சர்வதேச அளவிலான இராஜதந்திர நடவடிக்கைகளை தீவிரமாகக் கையாளவும், செயற்பாட்டுக் குழுக்களை ஆரம்பிக்கவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பின் போது முடிவெடுக்கப்பட்டமையானது மேற்குறித்த எண்ணக்கருவின் அடிப்படையில் அமைந்த ஒன்றாகும்.


அதுமட்டுமல்ல எமது மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், சமுதாய சிந்தனையை - பொறுப்புணர்வை வளர்த்து கலாசார சீரழிவை தடுத்து நமது தமிழ்ப் பண்பாட்டு செழுமையைப் பேணி வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்நின்று நெறிப்படுத்தவேண்டிய பொறுப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரைச் சார்ந்ததேயாகும்.

தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சி என்பது தமிழ் மக்களின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்பதன் மூலமே மேம்பாடுகளை எட்டமுடியும் என்பதும் நிராகரிக்க முடியாத உண்மையேயாகும். உருவாக்கப்படும் செயற்பாட்டுக் குழுக்கள் இவற்றை முக்கிய கவனத்தில் எடுப்பதும் அவசியமாகும்.

இந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பொறுப்பினை இலட்சிய உணர்வுடன் மேற்கொள்ளவேண்டிய வரலாற்றுக் கடமையைக் கொண்டோராகின்றனர்.

தமிழ் மக்கள் அவர்களை வெறுமனே சராசரி அரசியல் வாதிகளாகவோ, நாடாளுமன்ற உறுப்பினர்களாகவோ பார்க்க விரும்பவில்லை என்பதே இன்றைய யதார்த்தமாகும்.

# நாடும் நடப்பும்




## வெடிபொருட்களை அகற்றுவோருக்கான முகாமைத்துவ பயிற்சிகள் அடுத்தவாரம்

வடக்கு - கிழக்குப் பகுதியில் வெடிபொருள் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சிகள் அடுத்த வாரம் முதல் நடத்தப்படவுள்ளதென யாழ்.செயலகத்தில் இயங்கும் மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் இங்கிலாந்தின் கிறேன்பீல் பல்கலைக்கழகததில் நடததப்பட்ட மிதிவெடிச் செயற்பாட்டாளர்களுக்கான சிரேஷ்ட முகாமைத்துவப் பயிற்சியில், இலங்கை சார்பில் கலந்து பயிற்சி பெற்ற யாழ். மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தைச் சேர்ந்த எல்மோ ஆனந்தராஜாவினால் இந்தப் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் பகுதிகளில்வெடி பொருள் அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு முதலில் இந்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்ட பின்னர் கிழக்குப் பகுதி வெடிபொருள் அகற்றும் பிரிவினருக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## நகர குப்பை கூழங்களை அகற்ற நவீன முறையில் நடவடிக்கை

யாழ் நகரப் பகுதியில் கொட்டப்படுகின்ற குப்பை கூழங்களை நவீன முறையில் அப்புறப்படுத்துவதற்கும், அவற்றை சேதனப் பசளைகளாக மாற்றுவதற்குமான நவீன செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக யாழ் . மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த யாழ். மாநகரசபை ஆணையாளர் க.குணராஜா இது பற்றித் தெரிவிக்கையில் -

ஒரு நகரத்தின் அழகு, குப்பைகளை அப்புறப்படுத்துவதிலே தங்கியுள்ளது. இதனை மும்பாய் நகரிலே பார்க்கக்கூடியதாக இருந்தது.

இதற்கமைய யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள குப்பை கூழங்கள் நவீன முறையில் அகற்றப்பட உள்ளதுடன், அவற்றில் இருந்து சேதனப் பசளைகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## அரசு விடுமுறை தினங்களை குறைப்பதற்கு நடவடிக்கை

ஒவ்வொரு மாதமும் வரும் போயா தினத்துக்குப் பதிலாக வெசாக், பொசன் போயாவுக்கு மாத்திரம் விடுமுறை வழங்கப்படவுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சர் அமரசிறிதொடங்கொட தெரிவித்தார்.

விடுமுறைத் தினங்களைக்குறைத்து, மாதாந்த போயா தினங்களை நிறுத்திவிட்டு, வெசாக், பொசன் ஆகிய இரு தினங்களுக்கு மட்டும் விடுமுறை வழங்குவது பற்றி அரசு கவனமெடுத்துள்ளதாகவும், மற்றைய மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு 2 நாள் வீதம் விடுமுறை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

காலி மாவட்டத்தில் நடைபெற்ற ஓய்வுபெற்றோர் சங்க சம்மேளனத்தின் 13 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## பட்டதாரிகளுக்கான பயிற்சிநெறி மூப்பு அடிப்படையில் நடைபெறவேண்டும்

### பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை

பட்டதாரிகள் பயிற்சி நெறி - மூப்பு அடிப்படையில் நடை பெறவேண்டும் என, யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கோரிக்கைவிடுத்துள்ளது.

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம், யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் வழங்கிய மகஜரிலேயே இந்தவிடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

எதிர்வரும் 02 ஆம் திகதி வழங்கப்படவுள்ள பட்டதாரிகளுக்கான பயிற்சியானது, முறையற்ற வகையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தப் பயிற்சி நெறி மூப்பு அடிப்படையினைக் கருத்திலெடுக்காத வகையில் அமைந்து, ஏற்கனவே வெளியிடப்பட்ட பெயர்ப்பட்டியலுக்கு அமைவாக நடைபெறவுள்ளது.

இதற்கான தொடக்க விழா அரச அதிபர் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதனைத் தவிர்த்து, ஏற்கனவே பெயர்ப்பட்டியலில் வந்தவர்களையும், இன்னும் பெயர்ப்பட்டியலில் வராதவர்களையும் இணைத்துக்கொண்டு, மூப்பு அடிப்படையில் பட்டியலை ஒருங்கமைத்து அதன்பின் பயிற்சி வழங்குவதற்கு ஏற்ற ஒழுங்கு செய்யப்பட வேண்டும் என மேலும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓய்வூதிய மீளாய்வு விண்ணப்பங்களை பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்கவும்

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களில் சிலர் தமது ஓய்வூதிய மீளாய்விற்கான விண்ணப்பப் படிவங்களை இதுவரை பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இவர்கள் இந்த விண்ணப்ப படிவங்களை பிரதேச செயலகத்தில் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

இவர்கள் தமது விண்ணபத்துடன் ஆசிரியர் பயிற்சி சான்றிதழின் போட்டோப் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும். இந்தச சான்றிதழ் இல்லாதவர்கள் யாழ்ப்பாண கல்வித் திணைக்கழத்தின் மூலம் தமது பயிற்சி காலத்தினை உறுதிப்படுத்திய கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும். இந்த ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே இவர்களின் அதிகரித்த ஓய்வூதிய கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கரவெட்டி பிரதேசசெயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

## நாடு திரும்ப முயன்ற 27 அகதிகள் கைது

தமிழக அகதிமுகாம்களில் தங்கியிருந்த 27 இலங்கைத் தமிழ் அகதிகள் படகுமூலம் நாடுதிரும்ப எத்தனித்த போது, தமிழகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

திருச்சி, மண்டபம் உள்ளிட்ட பல்வேறு அகதி முகாம்களில் தங்கியிருந்த 27 தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் சட்ட விரோதமாக நாடுதிரும்ப முயற்சித்தனர்.


இவர்கள் இராமேஸ்வரம் பகுதியில் வைத்து தமிழகப் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதான 27 பேரில் ஏழுபேர் சிறுவர்கள் எனத் தெரிய வருகிறது.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 2500 ரூபாவை ஏஜென்ட் ஒருவருக்கு கொடுத்து, படகு மூலம் நாடு திரும்ப எத்தனித்ததாகவும், கைதான அனைவரும் மீண்டும் அகதி முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தமிழகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தெற்குத்திசையிலிருந்து... - இந்திரஜித்

# அரசின் தந்திரோபாயங்களும்; புலிகளின் அரசியல் சாணக்கியமும்!







நாட்டில் பொருட்களின் விலையுயர்வுகள் அதிகரித்த வண்ணமுள்ளன. ஒவ்வொரு நாளும் மக்களின் வாழ்க்கைச் செலவு வீதம் கூடிச் செல்லும் போக்கைக் கொண்டுள்ளது.

ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் நாட்டைக் காப்பாற்றும் முயற்சிகள் மந்த கதியிலேயே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

மறுபக்கமாக அந்த அரசாங்கத்தின் பங்காளிகளான ஜே.வி.பியினரின் அரசியல் பக்கமான வளர்ச்சி உயர்ந்து செல்கிறது.

ஜே.வி.பியினரைப் பொறுத்த வரையில் அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது ஏற்படுத்திக் கொண்ட கட்சி சார்பான வளர்ச்சியைக் காட்டிலும், தற்சமயம் பாரிய வளர்ச்சியைக் கண்டு வருகின்றார்கள்.

அது அவர்களின் திறமை என்பதைக் காட்டிலும் ஜனாதிபதியின் தலைமையின் கீழான சிறிலங்கா சுதந்திர கட்சியின் வீழ்ச்சியே என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தமது பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஜே.வி.பியினர் ஏதாவது ஒரு வழியில் ஜனாதிபதியுடன் இணங்கி வருவர் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஜனாதிபதியும் அதனையே எதிர்பார்த்தார். ஜே.வி.பி தமது அரசியல் உயர்ச்சிக்காகவே தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சியை எதிர்க்கிறார்கள்.

அரசாங்கத்தில் அங்கம் வகித்த பின்னர் அவர்களின் போக்கில் மாற்றம் காணப்படும் என்று பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், தற்சமயம் நிலைமை எல்லாமே மாறிப்போயுள்ளது. எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் அந்தக் கட்சி கொண்டிருந்த கொள்கைக்கும், தற்போது கொண்டுள்ள கொள்கைக்கும் மாற்றம் எதனையும் காண முடியவில்லை.

எனவே, ஜனாதிபதி தாம் எதிர்பார்த்த இலக்கை எட்ட முடியாத நிலையில் அதற்கு மாற்றான ஏற்பாடு ஒன்றை செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளார்.

அதிலும், தமிழ் மக்களே இதில் ஜனாதிபதியின் மீது அதிக நம்பிக்கையை கொண்டிருந்தனர். ஆனால், பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தின் போது, நாடாளுமன்ற பெரும்பான்மை இருந்த போதும் அவர் தமக்குரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

ஆனால், ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைக்கு அப்பால் சென்று அரசியலமைப்புக்குள் இருக்கும் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த உடன்பாட்டைசெய்து கொண்ட போதே ஜனாதிபதி தமது செயலின்மையை உணரலானார்.

என்னவாக இருந்தாலும், சமாதான முயற்சியை தீவிரமாக ஆரம்பித்தவர் என்ற வகையில் இலங்கையின் இனப்பிரச்சினையின் தீர்வு ரணில் விக்கிரமசிங்கவினால் ஏற்படுவதை ஜனாதிபதி விரும்பவில்லை.

எனவே, தமக்குத் தெரிந்திருந்தும் கூட காரணம் கூற முடியாத குற்றச்சாட்டுக்களை எல்லாம் அவர் ரணிலின் சமாதான முயற்சிகள் மீது சுமத்திக் கொண்டிருந்தார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். இவ்வாறான சூழ்நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சிகளை மேற்கொண்டார்.

அதனையும் செய்து முடித்தார். இதற்கென்று தாம் ஆட்சிக்கு வந்ததும் எல்லாவற்றையும் ஒரேயடியாக செய்து முடித்து விடலாம் என அவர் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

அதில் ஒன்று தான் நாட்டில் விலையுயர்வுகளை நடைமுறை பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் உயர்த்தாமல் இருக்க முடியுமென்பதாகும். எனினும் அன்று பொதுத் தேர்தல் பிரசாரத்தின்போது, ஜனாதிபதி பொருட்களின் விலையுயர்வுகளைக் கட்டுப்படுத்த முடியும் என்ற உறுதி மொழியையும் மக்கள் முன்னிலையில் தெரிவிக்காமல் இருக்கவில்லை என்பது இங்கு நினைவூட்டத்தக்க விடயமாகும்.

தற்போதைய நிலையில் நாட்டில் தேசிய அரசாங்கமா? அல்லது நல்லிணக்க அரசாங்கமா? ஏற்படுத்தப்படும் என்பது தொடர்பாகவே ஆராயவேண்டியுள்ளது ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் அந்தக் கட்சி இரண்டுக்கும் தயார் என்ற நிலையிலேயே இருக்கிறது.

ஏனெனில் தற்போதைக்கு அரசாங்கத்தை பொறுப்பேற்று நடத்தும் அளவுக்கு அந்தக் கட்சி உறுதியாக இல்லை என்பது வெளிப்படை. ஜனாதிபதி நாட்டில் இருந்த போது ஒவ்வொரு நாளும் ஏதாவது சமாதானம் தொடர்பான பேச்சுக்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

ஆனால், கடந்த 2 வாரங்களாக அவர் நாட்டில் இல்லாமல் வெளிநாடு சென்று விட்டதால், அந்தப் பேச்சுக்களில் சற்று குறைவுத் தன்மை காணப்படுகின்றது.

என்றாலும், பலரும் ஜனாதிபதி நாட்டுக்குத் திரும்பி, ஏதோ முக்கிய நடவடிக்கையை எடுப்பார் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள். ஜனாதிபதி நாடு திரும்பியதும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுநடத்துவார் எனவும், அதன் மூலம் நாட்டின் இனப்பிரச்சினை தீர்வுக்கு ரணிலின் உதவியை ஜனாதிபதி பெற்றுக்கொள்வார் என்றும் பல தரப்பிலிருந்தும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இதேநேரம் அவர் தமது நிறைவேற்று அதிகார முறையை பெரும்பாலும் பயன்படுத்தக்கூடிய நிலைக்கு உட்பட்டுள்ள ஒரு நிலையும் தற்போது எழுந்துள்ளது.

முன்னர் ஜனாதிபதி, மக்கள் விடுதலை முன்னணியை அரவணைத்துக் கொண்டு, சமாதான முயற்சிகளை முன்னெடுக்கப் போகிறார் என எதிர்பார்க்கப்பட்டபோது, இந்த நிறைவேற்று அதிகாரப் பிரயோகம் குறித்து அதிக அக்கறையை ஜனாதிபதி கொண்டிருக்கவில்லை.

ஆனால், ஜே.வி.பி என்ற மக்கள் விடுதலை முன்னணி தொடர்ந்தும் கடும் போக்கைக் காட்டி நிற்கும் நிலையில் ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரத்தைப் பற்றி நிற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அதன் வழியில் அவர், எடுக்கும் முடிவுகள் சில சந்தர்ப்பங்களில் தமது ஆட்சிப் பங்காளியை பகைத்துக் கொள்ளும் அளவுக்கு அல்லது அந்த ஆட்சிப் பங்காளி தமது நிலையை விட்டுக் கொடுக்கும் அளவுக்கு இட்டுச் செல்லலாம் என பலரும் எதிர்பார்க்கிறார்கள்.

முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றப் போகிறார் என கூறப்படும் போது, அனைவரும் அவர் இனப்பிரச்சினை தொடர்பாக முக்கிய முடிவுகள் எதனையும் அறிவிக்கப்போகிறாரோ? என்ற ஆதங்கத்துடன் இருப்பது வழக்கம்.

மறுபுறத்தில் ஏற்கனவே அந்தக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதா? இல்லையா? என அந்தக் கட்சியின் அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்து வந்தஇலங்கைத்தொழிலாளர் காங்கிரஸூம், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸூம் தற்போது முடிவெதனையும் எடுக்க முடியாத நிலையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எனவே, அவற்றை நம்பி ஆட்சி ஒன்றை அமைக்க ஐக்கிய தேசிய கட்சி தற்போதைக்கு தயாரில்லை. இதனைப் புரிந்து கொண்டமையால் தான் ஜனாதிபதியும் தமது ஆட்சி நிலை பெறுவது தொடர்பாக பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் இருந்து வருகிறார்.

ஜே.வி.பியை பொறுத்தவரையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இன்னமும் தீர்மானம் மேற்கொள்ளவில்லை எனக் கூறி வருவது அந்தக் கட்சியும் இலங்கையின் அரசியல் சூழ்நிலையை நன்றாகவே பயன்டுத்திக் கொள்கிறது என்பதை உணர்த்திநிற்கிறது.

அதே நேரம் தம்மை இனவாதிகளாக விமர்சித்து வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தம்முடன் பேசும் நிலைப்பாட்டை அந்த கட்சி இவ்வளவு விரைவில் எதிர்பார்க்கவில்லை.

எனவே, தான் குறிப்பிட்ட விடயத்தில் அது மௌனம் சாதித்து வருகிறது. இந்த இடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது அரசியல் சாணக்கியத்தை மீண்டும் ஒரு முறை தென்னிலங்கை மக்களுக்கு மலையக மக்கள் முன்னணியின் மூலமாக உணர்த்திவிட்டனர்.

முன்னர் தென்னிலங்கையில் வெள்ளம் ஏற்பட்ட போது தமிழீழ விடுதலைப் புலிகள் நிவாரணங்களை வழங்கி, தென்னிலங்கை மக்களின் மனங்களில் இடம்பிடித்தனர்.

அதேபோன்றே மலையக மக்கள் முன்னிணியின் தலைவர் பி.சந்திரசேகரன் ஊடாக மல்வத்த மகாநாயக்கரிடம் தமது அரசியல் சாணக்கியத்தை பறைசாற்றியுள்ளனர்.

பௌத்த நாட்டு மக்களின் மனங்களை அரசியல் ரீதியாகக்கவர, எங்கு கை வைக்க வேண்டியிருந்ததோ அங்கு கை வைத்தாகிவிட்டது. இந்த நிலையில் ஜே.வி.பி தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் கூறிவருவது எல்லாவற்றையும் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ள முன்வருவார்கள் என்பதில் ஐயநிலை தோன்றியுள்ளது.

அதாவது ஜே.வி.பியின் மாற்றுக் கருத்துக்களின் மீது ஒரு சிறு கரும்புள்ளி வீழ்ந்துள்ளது. ஜாதிக ஹெல உறுமயவைப் பொறுத்தவரையில் அதனை ஜனாதிபதி தம்வசப்படுத்துவதில் வெற்றிக்கண்டு விடுவார் என்றே நம்பப்படுகிறது.

சரி எதிர்வரும் செம்ரெம்பர் முற்பகுதியில் நாடு திரும்பியதும், ஜனாதிபதி என்ன முடிவுகளை அறிவிக்கப்போகிறார் என்ற ஆதங்கம் அனைவரின் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி தரப்பில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின் படி, அரசாங்கம் அனைத்து எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் விரைவில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கான திகதியை அறிவிக்கவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தன்னாட்சியைத் தளமாககொண்டு, தமது மாற்று யோசனைகளையும் பேசலாம் என்ற ஏற்பாட்டில் பேச்சுவார்த்தையானது பெரும்பாலும் எதிர்வரும் நவம்பர் அல்லது டிசம்பரில் ஆரம்பிக்கப்படலாம் என அரசாங்கம் திகதி நிர்ணயித்துள்ளது.

நோர்வே தொடர்ந்தும் ஏற்பாட்டாளர் நிலையை வகிக்கும் அதே நேரம் இந்தியா பேச்சுவார்த்தையின் போது, கண்காணிப்பாளராக செயற்படும். இதற்கு இந்தியாவும் இணங்கியுள்ளதாக அரசாங்கத் தரப்பு கூறுகிறது.

இவையாவற்றிற்கும் மத்தியில் இடைக்கால நிர்வாகத்துக்கு எதிர்ப்பைக் காட்டி வரும் ஜே.வி.பி என்ன செய்யப்போகிறது. ஜே.வி.பி தமது அமைச்சுப் பதவிகளை ராஜினாமாச் செய்யுமா?

இந்த நிலையிலேயே ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் நாட்டுக்கு பிரயோசனப்படப் போகிறதா? இல்லையா? என்பது தெரியவரும். இந்த ஏற்பாடுகள் எல்லாம் வருட இறுதியில் தான் என்பதால், மக்கள் பொருளாதார விடயங்களில் துன்பப்படுவதைத் தவிரவேறு விழியில்லை.

இது உண்மையான சமாதானத்துக்காக நாட்டு மக்கள் செய்யும் தியாக செலவாக இருக்குமாக அமைந்தால், அது இலங்கை மக்களுக்கே பெருமையாகும். ❄

# அரச இறைமை எம்மிடம் இல்லாததாலேயே எமது பிரதேச அபிவிருத்தி பின்தள்ளப்பட்டது

— பொருளியல்துறைப் பேராசிரியர் வி.நித்தியானந்தன்

சுதந்திரத்தின் பின்னரான இதுவரைகாலமும், எமது பிரதேசத்தினது அபிவிருத்தி பேணப்படவில்லை. இலங்கை என்பது ஒரு பல்லின சமூகம் வாழும் நாடு என்ற வகையில், இந்தப் பல்லின மக்களிடையே சமூக, புவியியல் ரீதியில் வேறுபாடுகள் உள்ளன என்ற கருத்துநிலை அரசினால் ஏற்றுக் கொள்ளப்படாது. பேரின தேசியவாதத்தின் அடிப்படையில் அரசு செயற்பட்டு வந்தமை காரணமாகவே எமது பிரதேசத்தினது அபிவிருத்தி கவனிக்கப்படாது ஓரம் கட்டப்பட்டது. அரச இறமை எம்மிடம் இல்லாததாலேயே இந்த நிலை எமக்கு ஏற்பட்டது. எமது அரசியல் உரிமைகளை நாம் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் விட்டுக்கொடுக்க முடியாது. அப்படி விட்டுக் கொடுக்கும் ஒருநிலை தோன்றுகையில், எமது அனைத்து உரிமைகளுமே அதனூடாகப் பறிக்கப்பட்டுவிடும். இதுவே இன்றைய அனுபவமாக எங்கள் முன் நிற்கின்றது என யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறைப் பேராசிரியர் வி.நித்தியானந்தன் தெரிவித்தார்.

யாழ்.சமூக விஞ்ஞான படிப்புக்கள் வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசத்தினது பேண் தகு அபிவிருத்துக்குப் பொருத்தமான தந்திரோபாயம் என்ற தலைப்பிலான கருத்தரங்கு அண்மையில் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக அரச அறிவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரீ.கணேசலிங்கத்தின் அறிமுக உரையுடன் ஆரம்பமான இந்தக் கருத்தரங்கில், பேராசிரியர் வி.நித்தியானந்தன் தொடர்ந்தும் கருத்துரை நிகழ்த்துகையில்-

எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு வாய்ப்பான தளம் இன்று இருக்கிறது. எமது மக்கள் மீது சுமத்தப்பட்ட இருபது வருடப் போர் காரணமாக எமது சமூக, பொருளாதார, பண்பாட்டு விழுமியங்கள் முற்றாக சிதைக்கப்பட்ட நிலையில் இன்று நாம் வாழ்ந்து வருகின்றோம். யுத்தம் ஒரு வெறுமை நிலையை எமக்குத் தந்துள்ளது. இதுகூட ஒரு வாய்ப்பான தருணமே. இந்த வெறுமை நிலையில் இருந்து, எமது பிரதேசத்துக்கான அடிப்படைக் கட்டமைப்புக்களை புதிதாக கட்டியெழுப்ப நாம் முன்வரவேண்டும். இதனை விடுத்து, ஏற்கனவே சிதைக்கப்பட்டு, சிதைவடைந்து போயுள்ள கட்டமைப்புக்களைத் திருத்தி, மீள அதனைப் பழைய நிலைக்குக் கொண்டுவர முற்படுவது, எம்மை இருபது வருடம் பின்தங்கிய நிலையில் வைத்திருப்பதற்கான ஒரு பொறியாகவே கருதமுடியும்.

இதுவரை நாம் அனுபவித்த அழிவுகளின், இழப்புக்களின் பின்னர் - முன்பு இருந்த கட்டமைப்புக்களையே திருத்தி அமைத்து பழைய நிலைக்கு கொண்டு வருவதுதான் இன்றைய தேவை எனக்கருதினால், அது சிறப்பான ஒன்றாக இருக்க முடியாது. பழையவற்றைத் திருத்தி மீள அமைப்பது எமக்குத் தேவையற்றது. இன்று எமது பகுதியில் வளங்கள் சீர்கெட்டு, சமூக பண்பாட்டுத் தளங்கள் சிதைவுற்றுக் கிடக்கையில் நாம் மீளவும் பழைய கட்டமைப்புக்களையே திருத்தியமைக்க முயலுவது இன்றைய உலக ஒழுங்கில் பொருத்தமற்றது. இவை தான் பெறுபேறாக அமையுமெனில், நாம் இவ்வளவு போர் அழிவுகளைச் சந்தித்திருக்கத் தேவையில்லை.



அபிவிருத்தி என்பது பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்து உடல், உள, சமூக ஆரோக்கிய நிலைகளது உயர்வினைச் சுட்டி நிறகிறது. வரலாற்று ரீதியாக நோக்கும்போது அபிவிருத்தி அடைந்த நாடுகள், வளாச்சி, அபிவிருத்தி என்ற இரண்டையும் ஒருங்கே எடுத்துச் சென்றமையை நாம் அவதானிக்க முடியும். ஒரு காலத்தில் ஐக்கிய அமெரிக்காவில் காணப்பட்ட அடிமை நிலைகூட, அந்த நாட்டினது அபிவிருத்துக்கான ஒருபடியாகவே அமைந்திருந்தது. அபிவிருத்தி அடைந்தபின், இவை படிப்படியாக நீக்கப்பட்டு வருவதனையும் நாம் நோக்கமுடியும்.

எமது பிரதேச மக்களிடையே பேண் தகு நிலைத்தன்மை இல்லாதிருப்பதை நாம் அவதானிக்கலாம். எவ்வளவு செலவு செய்து ஒரு புதிய கட்டடம் அமைக்கப்பட்டாலும், ஒரு வருடத்தின் பின் அதனது தோற்றம் முற்றாகவே மாற்றப்பட்டிருப்பதை நாம் கண்டு கொள்ளமுடியும். தனியே உற்பத்தியை, அல்லது வேலை வாய்ப்பை, வருமானத்தை அதிகரிப்பதுதான் அபிவிருத்தி என்று கூறிவிட முடியாது. மாறாக சமூக, பண்பாட்டு விழுமியங்களையும் விரும்பக்கூடிய வகையில் மேம்பாடடையச் செய்யும் போது தான் அபிவிருத்தி என்பது சாத்தியமாகின்றது.

கடந்த இருபது வருட போர் எம்மை மிகவும் மோசமாக சிதைத்துவிட்டது. எமது பிரதேச வளங்கள் சீர்கெட்டுக் கிடக்கின்றன. இந்த நிலையில் எமது பிரதேச அபிவிருத்தி பற்றி நோக்கும்போது, வளங்களை மீட்டெடுப்பது மிக முதன்மையான ஒரு செயற்பாடாக உள்ளது. இன்று அத்துமீறல்கள் நிலததில மட்டுமல்ல, நீரிலும் காணப்படுகின்றன. எமது பிரதேச வளங்கள் மீட்டெடுக்கப்பட்டு பேண் தகு அபிவிருத்திப் பாதையில் இணைக்கப்படவேண்டுமாயின், முதலில் அதற்கேற்றதான ஒரு சமூக அரசியல் நிாவாகக் கட்டமைப்பு எமக்கு அவசியமாகின்றது. இந்த நிலையிலேயே நாம் எமது பிரதேச அபிவிருத்தி பற்றிக் கவனம் செலுத்துகையில், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை மிகவும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.(31)

# ஜப்பானில் கடும் புயல் நான்குபேர் பலியாகினர்



ஜப்பான் நாட்டில் கடும்புயல் வீசியது. இதனால், கடல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. மின் விநியோகம் முற்றிலும் தடைப்பட்டுள்ளது. புயலுடன் மழையும் பெய்வதால், ஆயிரக் கணக்கானோர் வீடுகளை இழந்து அகதி முகாம்களில் தங்கியுள்ளனர்.

ஆறுகளில் வெள்ளப்பெருக்கு அதிகரித்திருப்பதால், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதில், நான்குபேர் பலியாகியுள்ளனர். சாலையில் செல்லும் ஒரு வாகனம் புயற்காற்றால் அலைக்கழிக்கப் படுவதுடன், மரங்கள் முற்றிலுமாக நிலைகுலைந்து போயுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இஸ்ரேலில் இரு பஸ் குண்டு வெடிப்புகள் பதினைந்து பேர் பலி, 44 பேர் படுகாயம்!



இஸ்ரேல் தென் பகுதியில் நேற்று இடம் பெற்ற இருவேறு பஸ் குண்டு வெடிப்புகளில் 12 போ கொல்லப்பட்டதுடன், 44 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத்தாக்குதல் சம்பவம் கடந்த ஆறு மாதத்துக்குப் பின்னர், இஸ்ரேலில் நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலாகும்.

இஸ்ரேல் தொலைக்காட்சித் தகவலின்படி, இரண்டு பலஸ்தீன தற்கொலைதாரிகள் இரண்டு பஸ்ஸையும் செலுத்தி வந்ததாகத் தெரிவித்தது. ஆனாலும், இந்தத் தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை எனவும் செய்திகள் தெரிவித்தன.

இந்தத்தாக்குதலில் கொல்லப்பட்ட இருவரது உடல்கள் சிதைவடைந்த நிலையில் காணப்படுவதாகவும், இது அனேகமாக தற்கொலைதாரிகளுடையதாக இருக்கலாமெனவும் அந்தத் தொலைக்காட்சி தெரிவித்தது.

காயமடைந்த 44 பேரில 20 பேரின் நிலை கவலைக கிடமாகவுள்ளதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

லெபனானில் இயங்கும் ஹிஸ்புல்லா தொலைக காட்சி நிறுவனம் பலஸ்தீனத்தை மேற்கோள் காட்டி வெளியிட்ட செய்தியில் இஸ்ரேல் படையினரால் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த தியாகிகளின் நினைவாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலை தாம் கடுமையாகக் கண்டிப்



பதாக பலஸ்தீன அமைச்சரான சயீப் எர்கத் தெரிவித்தார். இந்தத்தாக்குதல் இஸ்ரேல் அல்லது பலஸ்தீன பகுதிகளில் பொது மக்களின் இலக்குகள் மீது நடத்தப்பட்டால், அது கண்டிக்கத்தக்கதே எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - வெடிமருந்துடன் காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேல் செல்ல முயன்ற பலஸ்தீன இளைஞர் ஒருவரை நேற்று இஸ்ரேல் இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

இவர் வெடிமருந்தை தான் அணிந்திருந்த உடையினுள் மறைத்து வைத்தபடி இஸ்ரேல பகுதிக்குள் தொழில் நிமித்தம்சென்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நின்ற வரிசையில் நின்றபோதே கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நேபாளத்தில் பெருமளவு மக்கள் காணாமற்போனதாக குற்றச்சாட்டு!

## ஐ.நா.சபை விடுத்தது

(காத்மண்ட்)

நேபாளத்தில் பெருந்தொகையான மக்கள் காணாமற்போயுள்ளதாக ஐ.நாவும், லண்டனைத் தலைமையகமாகக்கொண்ட மன்னிப்புச் சபை யொன்றும் நேபாள அரசை எச்சரித்துள்ளன.

இந்த எச்சரிக்கை காணாமற்போனவர்களின் தினத்தன்று விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க[illegible].

[illegible]டந்த வருடத்தில் மட்டும் 378 [illegible] காணாமற்போயுள்ளதாகவும், இது [illegible]ந்த ஐந்து வருடத்துடன் ஒப்பிடு[illegible]கயில் மிக அதிகமானதெனவும், லண்டனைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் மன்னிப்புச்சபை தெரிவித்தது.

இந்த எச்சரிக்கை மூலம் உலகத்திலேயே அரசியற் காரணங்களினால் காணமற்போகும் மக்களின் எண்ணிக்கை நேபாளத்திலேயே அதிகமெனத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமற்போனவர்கள் தொடர்பாக சுதந்திரமான ஆய்வுகளை நடத்தி உண்மைகளை வெளிக்கொண்டு வரும் விசாரணையாளர்களுக்கு நேபாளப் படையினர் தடை விதிப்பதாகவும் அந்த அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

அரச படைகள், மற்றும் மாவோ கிளர்ச்சிவாதிகளால் கைது செய்யப்பட்டு, சித்திரவதைக்குட்படுத்தப் பட்டு, கொல்லப்படுவதனாலேயே இந்தக் காணாமற்போவோர் தொகை அதிகரித்துள்ளதாகவும், அந்த அமைப்பு தெரிவித்தது.

1998 ஆம் ஆண்டிலிருந்து காணாமற்போனோர் தொகை 622 எனத் தகவல்கள் தெரிவித்தபோதும், இது மன்னிப்புச்சபை தெரிவித்ததை விட குறைவானதெனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னிப்புச்சபையின் தகவலின் படி 1430 பேர் காணாமற்போயுள்ளதாகவும், இவர்களில் ஆயிரம் பேர் அரச படைகளினாலேயே காணாமற் போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் தொடர்பாக படையினருக்கு புதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அண்மையில் நேபாள பிரதமர் தெரிவித்திருந்தார்.

ஆனாலும், காணாமற்போனவர்கள் தொடர்பாக நேபாள அரசு கடந்த காலங்களில் வழங்கிய உறுதிமொழிகளைக்காப்பாற்ற மேலும் நிறையச் செய்ய வேண்டியுள்ளதாக மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.


## சிறு விளம்பரம்

**ஆட்டோ சாரதி தேவை**

[illegible]சாரதி அனுமதிப்பத்திரத்துடன் [illegible]வும். M.G.M 777 K.K.S Road, J[illegible]a. (C/3025)

ஆட்டாமா, வறுத்தமா, சிவப்பு அரிசி மா, வறுத்த வெள்ளை அரிசி மா, வெள்ளை அரிசி மா, கடலை மா, குரக்கன் மா, கோதுமை குறுணல் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள முகமது கிறைண்டிங் மில் அன் ஸ்ரோர்ஸ், இல 777, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C/3022)














# குண்டுவெடிப்பு மூலமாகவே ரஷ்ய விமான விபத்து நடந்தது

## விசாரணையாளர்கள் தெரிவிப்பு


ரஷ்யாவில் கடந்த வாரத்தில் இடம்பெற்ற விமான விபத்து - குண்டு வெடிப்பின் மூலமே ஏற்பட்டதாக, இது தொடர்பாக விசாரணை நடத்தி வரும் விசாரணையாளர்கள் உறுதிப் படுத்தியுள்ளனர்.

இரண்டு விமானங்களும் பயங் கரவாதிகளின் தாக்குதலிலேயே அழிக்கப்பட்டதாக விசாரணையாளர்களுள் ஒருவரான லெப்.ஜெனரல் அன்ட்றியூ பெற்றிசோவ் தெரிவித்தார்.

அத்துடன், விமானங்கள் வெடி குண்டுகள் மூலம் அழிக்கப்பட்டதற்கான தடயங்கள் இரண்டு விமானத்தின் பாகங்களிலிருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணையாளர்கள் தெரிவித்தனர்.

ஒரு விமானத்தின் விமான ஓட்டிகள் தமக்கு எவ்வித பிரச்சனையும் இல்லையெனத் தெரிவித்தனர். ஆனால், மற்றொரு விமானத்திலிருந்து வந்த சைகையின்படி விமானத்தை விபத்துக்குள்ளாக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்ததாக ரஷ்யாவின் போக்குவரத்து அமைச்சர் இகோர் லெவிரின் ரஷ்ய தொலைக் காட்சிக்கு தெரிவித்தார்.

விமானத்தில் பயணம்செய்த இரண்டு பெண்கள் மீதே விசாரணையாளர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். இந்த விமான விபத்துக்களில் கொல்லப்பட்ட இரண்டு பெண்களின் உடல்களை பொறுப்பேற்க எவரும் வரவில்லை எனவும், இவர்கள் செச்சின்யாவில் தனிநாடு கோரிப் போராடிவரும் செச்சினிய பிரிவினைவாத அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கலாமெனவும் விசாரணையாளர்கள்



தெரிவித்தனர்.

இதேவேளை - இந்த இரண்டு விமானங்கள் மீதும் தாமே தாக்குதல் நடத்தி அழித்ததாக பெரும்பாலும் அறியப்படாத இஸ்லாம் போலி பிரிகேட் என்ற அமைப்பு இணையத் தளம் மூலம் உரிமை கோரியுள்ளது.

செச்சின்யாவில் தொடர்ந்தும் எமது முஸ்லிம் சகோதரர்கள் படுகொலை செய்யப்படுவார்களாக இருந்தால், இவ்வாறான தாக்குதல்கள் தொடர்ந்தும் தம்மால் நடத்தப்படுமெனவும் அந்த அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.

இந்த அமைப்பினரின் உரிமை கோரல் தொடர்பாக ரஷ்ய அதிகாரிகள் எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை. பாகிஸ்தானில் அண்மையில் நடந்த தாக்குதலுக்கும் இந்தப் பெயரைக் கொண்ட அமைப்பே உரிமை கோரியிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.


## தமிழீழ மாவட்ட நீதிமன்று-கிளிநொச்சி

வழ. இல :- 118/04,
பெறுமதி :-
தன்மை :- விவாகரத்து

வழக்காளி :-

திரு. கணபதிப்பிள்ளை இராசநாயகம்,
இல. 902 சில்வா வீதி,
வட்டக்கச்சி.

எதிராளி :-
திருமதி. வெண்ணிலா இராசநாயகம்,
தீப ஒளி, தெனி, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

### அறிவித்தல்

எதிராளி :-

இத்துடன், இணைக்கப்பட்டுக் காட்டப்பட்டுள்ள இடைக்காலத் தீர்வையில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இவ்வித இடைக் காலத்தீர்வை கிடைக்கப்பெற்று 21 நாட்களுக்குள் மன்றில் தோன்றி நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும், தவறின் இவ் இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதனை இத்தால் வெளிப் படுத்துகின்றேன்.

### இடைக்கால தீர்வை

இந்த 2004 ஆம் ஆண்டு 05 ஆம் மாதம் 31 ஆம் நாள் வழக்காளி இவ்வழக்கை இம் மன்றில் தாக்கல் செய்து உரிய முறையில் எதிராளிக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டு எதிராளி மன்றுக்கு சமுகம் கொடுக்காமையால் இவ் வழக்கு ஒரு முக விளக்கத்துக்கு தவணையிடப்பட்டு கடந்த 26.07.2004 நாள் அன்று நீதியாளர் திரு.மணியரசன் அவர்கள் முன்னிலையில் ஒரு முகவிளக்கம் இடம்பெற்று அன்றைய தினமே வழக்காளி மற்றும் வழக்காளி தரப்பு சட்டத்தரணி முன்னிலையில் தீர்ப்பு வழங் கப்பட்டது. அதாவது வழக்காளியின் உரிமைக்கோரிக்கையின் 1ம் 2ம் பகுதிகளை அதாவது, வழக்காளி எதிராளியிடம் இருந்து நிரந் தர மணவிலக்கை பெறுவதுடன், எதிராளியிடம் இருக்கும் 3 பிள்ளை களையும் எதிராளி வழக்காளியிடம் ஒப்படைக்குமாறு தீர்ப்பு வழங் கப்பட்டு கட்டளையிட்டு தீர்வை பதியப்படுகிறது.

வரைபு :-
சீ.க.அமல் நிக்சன்
சட்டத்தரணி
மாவட்ட மேல், மேன்
முறையீட்டுமன்று
கிளிநொச்சி.

நீதியாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

(C/3026)


# காஸாப் பகுதி குடியிருப்புக்களை அகற்றும் திட்டத்தை ஷரோன் தயாரிப்பு




காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேல் குடியிருப்பாளர் மற்றும் படையினரை விலக்கும் சர்ச்சைக்குரிய திட்டம் தொடர்பான நிகழ்ச்சி நிரலை இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் தயாரித்துள்ளார்.

இஸ்ரேல் நாடாளுமன்றில் இந்தத்திட்டம் தொடர்பாகத் தனது கட்சி உறுப்பினர்களிடையே பிரதமர் ஷரோன உரையாற்றுகையில் இந்தத்திட்டத்தை நிச்சயம் நடைமுறைப்படுத்தப்போவதாகத் தெரிவித்தார்.

காஸாவிலுள்ள 21 குடியிருப்புக்களையும் மற்றும் படையினரையும் சேர்த்து மொத்தமாக ஏழாயிரம் பேரை வெளியேற்றுவதுதே பிரதமர் ஷரோனின் திட்டமாகும் இதற்கு ஆதரவாக பிரதமர் ஷரோன் தனது அமைச்சரவையில் இந்த மாத நடுப் பகுதியில் வாக்கெடுப்பை நடத்தி அதன்பின்னர், நவம்பர் மாதம் நாடாளுமன்றில் வாக்கெடுப்பை நடத்த வேண்டும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



நல்லைக் கந்தன் 11 ஆம் நாள் திருவீதியுலாக் காட்சி

## உறக்கத்திலிருந்த...

இவர் நேற்றுமுன்தினம் உறக்கத்திலிருந்த தனது மனைவியின் முகம் மற்றும் காதுப் பகுதியைக் கடித்துக் குதறியதுடன் தடுக்க முற்பட்ட மனைவியையும் சகோதரியையும் கடுமையாகத் தாக்கினார்.

காயமடைந்த குறிப்பிட்ட நபரின் மனைவி சி.ரதி (வயது 25) யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கிழக்கு...

இடம்பெற்ற பேச்சு வார்த்தை தொடர்பாக கருத்துக் கூறுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் சேனாதியின் வீரச்சாவை அடுத்து வாகரைப் பிரதேசத்தில் மாங்கேணி இராணுவ முகாமுக்கு அண்மித்த பகுதியில் பாவா, யோகா ஆகிய இருவருடைய வீரச்சாவு ஆகியன இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெற்றன.

இது எங்களின் அரசியல் பணி செய்யும் போரளிகளுக்கான ஒரு அச்சுறுத்தலாக இருக்கிறது. இதைத் தெளிவாக அவர்களுக்கு விளங்கப்படுத்தினோம். இதுதான் இன்று பேசப்பட்டவையாகும்.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் எங்களுடைய அரசியல் வேலைகளுக்கான முழுப் பொறுப்புமே இராணுவத்தினரின் பொறுப்பாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் ஆயுதம் தாங்கிய ஏனைய குழுக்கள் அனைத்தும் வடகிழக்கின் வெளியே கொண்டு செல்லப்படவேண்டும். ஆனால் உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை அரசும், இராணுவமும் இதுவரை எந்த விதமான முடிவும் எடுக்கவில்லை. அந்த முடிவை அவர்கள் நடைமுறைப்படுத்தியிருந்தால் இது போன்ற பிரச்சினைகள் ஏற்படாது. எங்களுடைய அரசியல் பேச்சுவார்த்தைகள் நல்ல சூழ்நிலையில் இடம் பெற்றிருக்கலாம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்ட போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன் புறூவ் ஹொவ்டே -

இந்தச் சந்திப்பின்போது மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பொதுவான நிலைமைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. படைத்தரப்பினருடன் சந்திப்புக்களை நடத்த விடுதலைப் புலிகளின் தளபதி ரமேஷ் இணக்கம் தெரிவித்தார். இவ்வாறான சந்திப்பின் மூலம் இரண்டு தரப்பினருக்கிடையிலான உறவுகளில் முன்னேற்றம் காணப்படும் என நம்புகிறேன்.

இந்தச் செயற்பாட்டினையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். இரண்டு தரப்பினரும் சந்தித்து பேச்சுக்கள் நடத்துகின்றபோது பல பிரச்சினைகள் தீர்க்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கண்காணிப்பு...

சம்பவங்கள் தொடர்பாகவும் போர் நிறுத்தத்தை செம்மையான முறையில் அமுல் படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

## லண்டனில்..

இந்தச் சந்திப்புக்குறித்து கருத்து வெளியிட்ட எரிக்சொல் ஹெய்ம் -

போர்நிறுத்த உடன்படிக்கையின் அனைத்து அம்சங்கள் குறித்தும் பேசப்பட்டன. இதன்பின்னரும் போர் நிறுத்த உடன்பாட்டைக் கடைப்பிடித்து நடப்பது அவசியம்.

கொழும்பில் அண்மையில் இடம் பெற்ற கொலைகள் மற்றும் கிழக்கில் இடம்பெறும் வன்முறைகள் குறித்தும் பேசப்பட்டன.

இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ்ட் பிறட்ஸ்கர் ஜனாதிபதி சந்திரிகாவிடம் எடுத்து விளக்குவார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பட்டதாரிகளுக்கான...

பட்டதாரிகளுக்கான பெயர்ப் பட்டியலைத் தயாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இந்த எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

நேற்று யாழ்.உயர் கலைக்கல்லூரியில் கூடிய யாழ்.குடாநாட்டு வேலையற்ற பட்டதாரிகள் அனைவரும் இந்தப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை நடத்துவது தொடர்பாக தீர்மானம் எடுத்தபோதிலும், அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட முதல் பட்டியலில் தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகள், இந்தபோராட்டம் தவறான செயற்பாடென எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஆனாலும், இவர்களின் இந்த எதிர்ப்பையும் மீறி, நேற்றைய கூட்டத்தில் நாளை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதுதொடர்பாக, முதலாம் பட்டியலில் தெரிவுசெய்யப்பட்டபட்டதாரிகள் தமது கடும் அதிருப்தியைத் தெரிவித்துள்ளதுடன், நாளை வீரசிங்கம் மண்டபத்தில் வழங்கப்படவுள்ள பயிற்சி நெறிக்கான கடிதத்தினை முதலாம் பட்டியலில் தெரிவுசெய்யப்பட்ட சகல பட்டதாரிகளையும் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளனர்.

அத்துடன், ஏனைய பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படவேண்டுமெனக் கோரி நடத்தப்பட உள்ள போராட்டங்களுக்கு தமது பூரண ஆதரவினைத் தெரிவிப்பதாகவும், ஆனால் வழங்கப்பட்ட நியமனங்களை இரத்துச் செய்யுமாறும், பிற்போடுமாறும் கோருவதனை தாம் எதிர்ப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அடுத்த தொகுதிப் பெயர்ப் பட்டியலில் இன்றுவரவுள்ள நிலையில் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தன்னிச்சையாக எடுத்த இந்த முடிவை ஏற்றுக் கொள்ளப் போவதில்லையெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (100)

யாழ்.பல்கலைக்கழக

# கல்விசாரா ஊழியர்கள் இன்றுமுதல் வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் இன்று முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

புதிய சம்பளத் திட்டத்தை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று இந்த மாதம் முதல் அமுல்படுத்தத் தவறியமையை கண்டித்தும், அதனை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியே இவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களும் இதனை வலியுறுத்தி இன்று முதல் கடமைக்குச் செல்லாது வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஊழிய[ர்]கள் இன்று இராமநாதன் மண்டபம் முன்பாக ஒன்று திரண்டு மே[ற்]படி கோரிக்கையை முன்வைத்து வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போ[வ]தாக ஊழியர் சங்கத்தின் தலைவ[ர்] சி.தங்கராஜா தெரிவித்தார்.

இன்று நடைபெறும் வேலை நிறுத்தத்தினால் யாழ்.பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்[வி]சாரா நடவடிக்கைகளும் பாதிக்கப்படும்.

# கருத்தரங்கு!

யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறையின் இளம் பொருளியல் கழகம் நடாத்தும் "சமாதான முயற்சிக்கான தடைகளும், உலக நாடுகளின் கொள்கை வகுப்புக்களும் என்ற தலைப்பில் கருத்தரங்கு இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பொருளியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அரசறிவியல்துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் மேற்படி தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.

## வீடுகளை...

இனியும் பார்த்து நிற்கமுடியாது.

எமது அடிப்படை மனித உரிமைகளை மீறும் வகையில் அமைந்துள்ள இச்செயலுக்கு சரியான தீர்வு கண்டு எம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு வேண்டுகிறோம் என அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படையினருடனான...

ஜூன் 2 ஆம் திகதிக்குப் பின்னர் நீண்ட காலமாக இவ்வாறான சந்திப்புக்கள் தவிர்க்கப்பட்டன.

நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த சந்திப்புக்கு இணக்கம் ஏற்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

புல்லாவெளிச் சந்தியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா, புனர்வாழ்வுப் பொறுப்பாளர் யோகா ஆகியோரது கொலைச் சம்பவங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில், விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறைச் சிறப்புத தளபதி கேணல் த.ரமேஷ், மட்டு. அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.கௌசல்யன், தளபதி ரமணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன் புறூவ் ஹொவ்டேயுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதியும் சந்திப்பில் கலந்துகொண்டார்.

இதேவேளை கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே, நேற்றுக்காலை இராணுவ அதிகாரிகளுடன் முதலில் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

233 ஆவது பிரிகேட் தலைமையகத்தில் நடந்த இந்தச் சந்திப்பில் மாவட்டத்திலுள்ள இராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்கள் குறித்தும், பாதுகாப்பு நிலை தொடர்பாகவும் விசேடமாக ஆராயப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.


## தேவை

எமது வர்த்தக நிறுவனத்துக்கு ஆட்கள் தேவை.

ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. காலை 10 - 11 வரை சமுகந்தரவும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

இமேஜ் ஆட் சென்றம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.


# மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு; சமாச அலுவலகம் தாக்கப்பட்டது

குருநகர் மீனவர்களின் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச அலுவலகம் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது. பூநகரிக் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது நேற்றுமுன் தினம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டபோது மீனவர் ஒருவர் காயமடைந்தார் அத்தோடு மீனவரின் படகொன்றும் கொழுத்தப்பட்டது.

இந்த நிகழ்வைக் கண்டித்தே குருநகர் மீனவர்கள் நேற்று நன்பகல் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் அலுவலகத்தின் முன் திரண்டு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதுடன் சமாசத்தின் பெயர்ப் பலகையையும் சுற்றியிருந்த பொருட்களையும் சேதப்படுத்தினர்.

இதனால் சமாசத்திலிருந்த ஊழியர்கள் அங்கிருந்து ஓடித்தப்பினர். பின்னர் சமாசம் பூட்டப்பட்டதுடன் அங்கிருந்த கூட்டமும் கலைந்து சென்றது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த சென்ஜேம்ஸ் வீதி குருநகரைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான தர்மநாயகம் அமலன் (வயது - 28) என்பவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.



இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் நிருபமாராவ் நேற்றுமுன்தினம் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை அவரது அலுவலகத்தில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# மிலிந்த மொறகொட இந்தியா பயணம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மிலிந்த மொறகொட இன்று இந்தியா செல்லவுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய இவரது இன்றைய இந்திய விஜயம் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா செல்லவுள்ள மிலிந்த மொறகொட இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் பல்வேறு இந்தியத் தலைவர்களையும் சந்தித்து இலங்கையில் தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை மற்றும் பொருளாதார நிலைமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை - எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் விரைவில் இந்தியாவுக்குச் சென்று இந்தியத்தலைவர்கள் பலரைச் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நோர்வேக்கு சென்ற மிலிந்த மொறகொட அந்நாட்டின் பிரதிவெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசனுடனும், விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்முடனும் முக்கிய சந்திப்புக்களை நடத்தியதும் குறிப்பிடத்தக்கது. (01)

## மரண அறிவித்தல்

### வைரமுத்து செல்வம் (காந்தி)

கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து செல்வம் நேற்றுமுன்தினம் (29.08.2004) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் ஜமுனாவதியின் அன்புக் கணவரும் சயந்தினி, காலஞ்சென்ற சியாமினி, சிவாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதேஸ்குமாரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*அரசடி வீதி,*
*கட்டுடை, மானிப்பாய்*

தகவல்:
மனைவி, மகள், சகோதரன்

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.